15-6-55

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை



308/3-55

செய்திகள்

நேருஜியின் 'இந்திய தரிசனம்'

நேருஜி எழுதிய 'இந்திய தரிசனம்' (Discovery of India) என்ற நூலை ரஷ்ய மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள். நேரு இப்பொழுது ரஷ்யாவுக்கு விஜயம் செய்திருக்கிறார். இவருடன் இவருடைய குமாரி ஸ்ரீமதி இந்திரா காந்தியும் சென்றிருக்கிறார். பேரப்பிள்ளைகளான சஞ்சீவா, ராஜீவா இருவரும் அவர்களைப் பம்பாய் வரையில் வந்து வழியனுப்பினார்கள். நேருஜி வருவதற்குள் அவருடைய புத்தகத்தை வெளியிட்டுவிட ரஷ்ய சர்க்கார் முயன்று கொண்டு வந்திருக்கிறார்கள். நேருஜி ஏறிச் செல்லும் 'அஜந்தா ராணி' என்ற விமானம் பம்பாயிலிருந்து 5-ஆம் தேதியன்று புறப்பட்டது.

சிதம்பரம் மகா கும்பாபிஷேகம்

சிதம்பரத்தில் உள்ள ஸ்ரீ நடராஜா கோயில் திருப்பணி முடிந்து கும்பாபிஷேகம் நடத்த விரிவான ஏற்பாடுகள் செய்துவருகிறார்கள். 7-7-55 அன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறும். இதற்கென விசேஷ ரெயில் போக்கு வரத்துக்கும், சுகாதார வசதிகளுக்கும் ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள்.

மதுரை நகரசபை கார்ப்பரேஷன் ஆகும்

சென்னை ராஜ்யத்திலேயே இரண்டாவது பெரிய நகரம் மதுரை. இது இப்பொழுது முனிஸிபாலிடியாக இருந்து வருகிறது. இதைக் கார்ப்பரேஷனாக உயர்த்துவதற்குச் சர்க்கார் தயாராக இருக்கிறார்கள். இது பற்றிய பரிசீலனை முடிந்தபின் சர்க்கார் தங்கள் முடிவைத் தெரிவிப்பார்கள்.

தமிழில் காந்திஜி நூல்கள்

காந்திஜி எழுதிய நூல்கள் எல்லாவற்றையும் தமிழில் புத்தகமாக, சுமார் பத்து பாகங்களில் வெளியிட காந்தி நினைவு நிதி ஸ்தாபனத்தின் தமிழ்நாட்டுக் கிளை தீர்மானித்திருக்கிறது. மதுரையில் ஒரு காந்தி மியூஸியமும் ஏற்படுமாம்.

ரேடியோ டெலிபோன்

இப்பொழுது ரேடியோ டெலிபோன் இணைப்புவசதி இல்லாத நாடுகளிலிருந்து செய்திகளை லண்டன் மூலமாகவே பெறவேண்டியிருக்கிறது. இந்தியாவுக்குச் சீனாவுடனும் பர்மாவுடனும் நேரிட ரேடியோ டெலிபோன் தொடர்பு இருந்து வருகிறது. இப்பொழுது ரஷ்யாவுடன் இந்த இணைப்பை இந்த மாதம் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

திருவள்ளுவர் தினம்

தமிழ் நாடு முழுவதும் இம்மாதம் 4-ஆம் தேதி திருவள்ளுவர் தினத்தைக் கொண்டாடினார்கள். திருவள்ளுவர் பிறந்த இடமான மயிலையில் ஒரு கோயில் இருக்கிறது. திருவள்ளுவருடைய திருஉருவச்சிலையும் அவர் இல்லாள் வாசுகி அம்மையாரின் உருவச்சிலையும் அங்கே அமைந்திருக்கின்றன. அந்த இடத்தில் குருபூஜையும் நடத்தப்பட்டது.

கல்வி வளர்ச்சி

கல்வி வளர்ச்சிக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூபாய் 500 கோடி செலவிடப் போகிறார்களாம். ஆரம்ப ஆசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 50 ஆகவும் மத்தியதரப் பள்ளி ஆசிரியர்களுக்கு ரூபாய் 100 ஆகவும் உயர்த்த யோசித்து வருகிறார்களாம்.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 6 இதழ்: 12

15 - 6 - '55

குழந்தைகளே! பக்கம்	2
குண்டுச் சீமா ..	3
பையனும் கிளியும் ..	9
டியூஷன் வாத்தியார் ..	10
மைசூர் ..	13
கோடாலிக் காம்பு ..	18
அதிசயத் திருட்டு ..	24
கவியரங்கம் ..	29
கேளுங்கள் சொல்கிறேன் ..	30
பாரஸீக ரோஜா ..	33
வீடர் மணி ..	35
எங்கள் பகுதி ..	39
செய்திகள் - 2 - அட்டை	
அதிருஷ்ட எண்கள்-3-அட்டை	

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

15 - 5 - 55

அதிருஷ்ட எண்கள்

முதற் பரிசு		..	3623
2-ஆம் பரிசு			6700
3-ஆம் பரிசு	1.	..	1077
	2.	..	6730
	3.	..	7641
4-ஆம் பரிசு	1.	..	1[illegible]437
	2.	..	882
	3.	..	12322
	4.	..	10[illegible]12
	5.	..	9976

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
15 JUL 1955

மே 15-ஆம் தேதி வெளியான எல்லாக் கண்ணன் பிரதிகளிலும் எண்கள் வெளியாகியிருக்கின்றன. அவற்றில், மேலே வெளியாகியுள்ள இந்த எண்கள் எல்லாம் அதிருஷ்ட எண்கள். இந்த எண்கள் உள்ள கண்ணன் யார் யாரிடம் இருக்கிறதோ அவர்கள் உடனே எங்களுக்கு அதை அனுப்பி அதற்குரிய பரிசைப் பெற்றுக் கொள்ளலாம்.

கண்ணனை ரிஜிஸ்தர் தபாலில் அனுப்புவது நலம்.

பரிசு பெற்றவரின் முழு விலாசம், வயது, படிக்கும் வகுப்பு, பள்ளிக்கூடம் இவற்றையும் தெளிவாக ஒரு காகிதத்தில் எழுதி அனுப்ப வேண்டும். தொடர்கதைகளைத் தவிர மற்றப் பகுதிகளும் அட்டையும் அப்படியே கிழியாமல் அனுப்ப வேண்டும். ஜூலை மாதம் 1-ஆம் தேதிக்குள் கிடைக்கும்படி எங்களுக்கு அனுப்பவேண்டும். அதற்கு மேல் அனுப்பினால் பரிசுத் தொகைக்கு உரியதாகாது.

—ஆசிரியர்.

குழந்தைகளே!

உங்களுக்கு விடுமுறை முடிந்து விட்டது. எல்லாரும் மேல் வகுப்புக்குப் போகப் போகிறீர்கள். உங்களுடைய தேர்ச்சியே எங்களுடைய மகிழ்ச்சியாகும்.

விடுமுறையில் பலர் பல ஊர்களுக்குச் சென்றிருப்பீர்கள். பல புதிய இடங்களைப் பார்த்திருப்பீர்கள். பல புதிய விஷயங்களைத் தெரிந்துகொண்டிருப்பீர்கள். அவற்றையெல்லாம் ஞாபகப் படுத்திக் கோவையாகவும் அழகாகவும் எழுதிப் பாருங்கள். நீங்கள் பார்த்ததைப் பிறரும் படித்து ரஸிக்கும்படி எழுதுங்கள். உங்கள் மனசுக்கே நன்றாக இருக்கிறது என்று பட்டால் எழுதியதைக் கண்ணனுக்கு அனுப்புங்கள். எனக்கும் நன்றாக இருக்கிறது என்று தோன்றினால் கண்ணனில் பிரசுரிக்கிறேன். சிறு குழந்தைகள் பலவற்றையும் நன்றாகப் பார்க்கவேண்டும். பார்த்தவற்றைக் கொண்டு புதிய விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். தெரிந்துகொண்ட விஷயங்களைப் பிறருக்கும் தெரிவிக்கத் தெரிய வேண்டும். அப்பொழுதுதான் தெரிந்துகொண்டதுகூட மனத்தில் நிற்கும். அது அறிவு விருத்திக்கு உதவுகிறது. அதுவும் ஒருவகைக் கல்வியறிவுதான்.

சிலர் கண்ணனுக்குத் தொடர்கதைகள் எழுதியனுப்பி யிருக்கிறார்கள். இன்னும் சிலர் எழுதி முடிக்கவில்லையாம். எல்லாம் வந்து சேர்ந்த பிறகு படித்துப் பரிசீலனை செய்யத் தொடங்குவோம். அனுப்புகிறவர்கள் விரைவில் எழுதி முடித்து அனுப்பினால்தான் நல்லது. தொடர்கதைகளைப் பரிசீலனை செய்பவர்களை விரைவில் கண்ணனில் அறிவிக்கிறேன்.

கண்ணனில் பல பகுதிகள் உங்களுக்கு மிகவும் பிடித்திருப்பதை அறிந்து சந்தோஷப்படுகிறேன். செய்திகள் பகுதியில் சில மாறுதல்கள் செய்யவேண்டும் என்று பல ஆசிரியர்களும் மாணவர்களும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எத்தனையோ ஊர்களில் மாணவ மாணவிகள் பலவித விழா நிகழ்ச்சிகளிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்துகொள்கிறார்கள். கண்ணன் கிளைக் கழகங்களிலும் பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவற்றையெல்லாம் பலரும் அறியும்படி செய்திகள் பகுதியில் விரிவாக வெளியிட வேண்டும் என்று சொல்கிறார்கள். புகைப்படங்கள்கூட வெளியிடலாம். ஆனால் செய்திகளை யார் எழுதி யனுப்புவது? நீங்கள்தான் எழுதி யனுப்பவேண்டும். உங்கள் ஊரில் நடைபெறும் முக்கியமான நிகழ்ச்சிகளை நீங்கள் சுவையாக எழுதி யனுப்பலாம். பள்ளி நிகழ்ச்சிகளையும் எழுதலாம். ஊரில் பொது நிகழ்ச்சிகளையும் எழுதலாம். திருவிழாவைப் பற்றி எழுதலாம். பொதுநலப் பணிகளைப் பற்றி எழுதலாம். இயற்கை விந்தைகளைப் பற்றி எழுதலாம். இதற்காக ஒவ்வோர் ஊருக்கும் கண்ணன் நிருபர் என்று ஒரு குழந்தையைத் தேர்ந்தெடுக்க விரும்புகிறேன். அவர்கள் இந்தச் செய்திகளையும் கட்டுரைகளையும் சேகரித்து எழுதி அனுப்பலாம்.

மாணவ மாணவிகள் நடத்தும் எந்த நிகழ்ச்சியையும் கண்ணன் நிருபர் எங்களுக்கு எழுதியனுப்ப வேண்டும். இதை விளையாட்டு நேரங்களில் விளையாட்டுப் போலச் செய்யலாம். கண்ணன் நிருபர் என்று ஒருவரை, கிளைக் கழகங்களே தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டும். கிளைக் கழகங்கள் இல்லாத ஊர்களில் கண்ணன் நிருபராக இருக்க யார் விரும்புகிறார்களோ அவர்கள் நேராக எனக்கே எழுதலாம். கண்ணன் நிருபராக இருக்கத் தகுதியுள்ளவர் என்று இன்னும் இரண்டு குழந்தைகள் உங்களுக்கு அத்தாட்சிக் கொடுத்தால் போதும். அவர்களுடைய அத்தாட்சியை உங்கள் கடிதத்திலேயே வாங்கியனுப்பலாம். நிருபர்களின் பெயர்களை விலாசத்துடன் கண்ணனில் வெளியிட்டு விடுகிறேன். உங்களுடைய ஒத்துழைப்புடன் கண்ணன் மேலும் பலவிதத்திலும் சிறப்படைவான் என்பது நிச்சயம்.

—ஆசிரியர்.

துண்நச் சீமா

ராஜி

3

அப்பா அடிக்கடி கேஸுக்காக வெளியூர் போவது வழக்கம். அவர் வெளியூருக்குப் போனுல் எனக்குச் சற்று ஓய்வு என்று நான நினைப்பது உண்டு. அவர் இருந்தால், ''சீக்கிரம் எழுந்திரு; படி; அநாவசியமாகப் பொழுதை வீணுக்காதே; நேரத்திற் தப் பள்ளிக்கூடத்துக்குப் போ: மனத்தில் படியாததை எழுதிப்படி: அப்பே ,துதான் படியும்; மத்தியான வேளையிலே விளையா ட்ப்போகாதே; அல்லது தூங்காதே; புஸ்தகங்களை எல்லாம் கீரை மாதிரி கண்ட இடத்தில் போடாதே! எல்லாவற்றையும் எடுத்து அடுக்கி உன் அலமாரியில் வை; நகத்தைக் கடிக்காதே; காலையில் எழுந்தவுடன் ஏன் பாயைச் சுருட்டி வைக்கவில்லை?'' என்று இதுமாதிரியாக ஏதாவது சொல்லிக்கொண்டிருப்பார். அவர் சொல்லுவதெல்லாம் எனது நன்மைக்கே என்று பின் வாழ்க்கையிலே அறிந்தது போலஇளம் வயதிலேயே அறிந்திருந்தேனுனல் நான் எனது தகப்பனுரை எப்படிப் போற்றியிருப்பேன்!

அப்பா வெளியூருக்குக் கிளம்பி விட்டார். வாசலில் படுக்கை, பெட்டி, கூஜா முதலியவைகள் வைக்கப்பட்டன. ''ஜாக்கிரதையாக போயிட்டு வாடா'' என்று சொல்லிக்கொண்டே, அப்பா நெற்றியில் என் பாட்டி விபூதியை இட்டாள். தன் கையினுலே சுவாமியை நினைத்து விபூதி இட்டால் சௌக்கியமாகத் திரும்பி வருவார் என்ற நம்பிக்கை என் பாட்டிக்கு உண்டு. அப்பாவும் அதை நம்பினுர். ''சீமா, நான்கு நாட்களிலே திரும்பி வந்து விடுவேன். சமத்தா இரு. கீதாவுடன் சண்டை போடாதே. (கீதாதான் எனது தங்கை) கீதா! அண்ணுவுடன் சண்டை போடாதே அம்மா'' என்று சொல்லிவிட்டு வெளியூருக்குப் போனுர். அவர் ஊருக்குப் போன அன்றைய இரவே நான் என் அறைக்குப் போய், புஸ்தகத்தை வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தேன். படித்து முடிக்கும் பொழுது மணியைப் பார்த்தேன். மணி பதினென்று உடனே படுக்கையில் படுத்துக் கொண்டேன். மறுநாள் காலையில் எழுந்திருந்தேன். புஸ்தகத்தின் மீது கவனம் வைத்துக்கொண்டு படித்தேன். பிறகு பள்ளிக்கூடம் போய் விட்டு வெளியில்கூட போகாமல் வீட்டுக்கு வந்தேன. அவசரமாகச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு மறுபடியும் வெகு கவனமாகப் படித்தேன். படித்து முடிக்கும்பொழுது அன்று இரவு மணி பன்னிரெண்டு. மறு நாளும் அப்படியே! எங்கள் வீட்டில் எல்லாரும் என்னுடைய மாறுதலைக் கண்டு அதிசயித்தார்கள். என்

டியூஷன் வாத்தியார்கூட நான் கவனமாகப் படிக்கிறேன் என்று சொன்னதும் மிகவும் சந்தோஷமடைந்தார். அன்று ராத்திரி மணியே தெரியாமல் படித்துக் கொண்டிருந்தேன். என் உடம்பைப் பற்றியே சதா கவலை கொண்ட என் பாட்டி, "ஏ சீமா, நன்னாயிருக்குடா, நீ படிக்கிறது! இரண்டு நாளாய் நானும் பார்க்கிறேன், ராத்திரி பன்னிரெண்டு அடித்துக்கூடப் படுத்துக்க மாட்டேங்கிறயே! படுத்துக்கப் போகிறாயா, நான் வந்து விளக்கை அணைக்கட்டுமா?" என்று கத்தினாள். உடனே என் அம்மாவும் "சீமா, போதும் அப்பா; படுத்துக்கோ; ரொம்ப நாழி ஆயிடுத்து; நாளைக்குப் படிச்சிக்கலாம்" என்றாள். அப்பொழுது தான் நான் கடிகாரத்தைப் பார்த்தேன். கடிகாரத்தில் அப்பொழுது மணி ஒன்றாயிற்று. மணி தெரியாமல் படித்து விட்டேனே என்று அவசர அவசரமாக விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக்கொண்டேன். மறுநாள் மற்ற மூன்று நாட்களைவிட மும்முரமாகப் படித்



தேன். அன்றைத் தினம் சாப்பிடுவதற்கும் குளிப்பதற்கும்கூட அவகாசம் கிடைக்க வில்லை. அவசர அவசரமாகப் பள்ளிக்கூடம் சென்றேன். சாயங்காலம் பள்ளிக்கூடம் விட்டு வழக்கத்துக்கு மாறாக நேராக வீட்டிற்குத் திரும்பி வந்தேன். அப்பொழுது என்னுடைய டியூஷன் வாத்தியார் வந்திருந்தார். 'இது ஏதடா இது; படிப்புக்குத் தடையாக இவர் வந்திருக்கிறாரே!' என்று நினைத்துக் கொண்டே அவர் அருகில் போனேன்; உடனே அவர்,

''ஏண்டா சீனிவாசா, நீ ரொம்பப் படிக்கிறதாக எல்லோரும் சொல்கிறார்களே.. வீட்டு வேலைகள் ஜாஸ்தியாகப் பள்ளிக்கூடத்தில் கொடுத்திருக்கிறார்களா?'' என்று கேட்டார். ''ஆமாம் சார். பரீக்ஷை வந்துவிட்டதால் பழைய பாடங்களைப் படிக்கவேண்டி யிருக்கிறது. அத்துடன் புதுப் பாடங்களையும் கவனிக்க வேண்டி யிருக்கிறது. தயவு செய்து இன்றைக்கு டியூஷன் வேண்டாம் சார். நாளைக்கு வந்தால் எனக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும்'' என்றேன். டியூஷன் வாத்தியாருக்கு அப்பா ஊரில் இல்லாதது நன்றாகத் தெரியும். அதனால் நான் சொன்ன உடனே அவர் சந்தோஷமாக, ''சரி, இன்றைத் தினப் பாடத்தையும் நாளைக்கே சேர்த்துச் சொல்லித் தருகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போனார். மாலை சாப்பாட்டைச் சீக்கிரமே முடித்துக் கொண்டு, என் அறைக்குச் சென்று படிப்பதற்கு வெகு ஆர்வத்துடன் உட்கார்ந்தேன். என் தங்கை கீதா என் அறைக்குள் வந்து என் பக்கத்தில் உட்கார்ந்ததைக்கூட கவனிக்கவே இல்லை. ''என்ன அண்ணா, நீ படிக்கிற புஸ்தகத்துக்குப் பளபளப்பான அட்டை போட்டிருக்கு! அது என்ன புஸ்தகம் அண்ணா?'' என்று அவள் கேட்ட பொழுதுதான், எனக்கு அவள் அறையில் வந்திருப்பது தெரிந்தது. நான் சாதாரணமாகப் படிக்கும்பொழுது யாராவது வந்து தொந்தரவு செய்தாலே எனக்குப் பிடிக்காது. அதுவும் முக்கியமாக முழுக் கவனத்துடன் படிக்கும்பொழுது எனது தங்கை குறுக்கிட்டால் நான் எப்படிப் பொறுப்பேன்! ''அம்மா, இங்கே பார் கீதாவை, படிக்கிற பொழுது தொந்தரவு கொடுக்கிறாள்'' என்று கத்தினேன். பயந்து கீதா வெளியே ஓடிவிட்டாள்.

''இன்னுமா படிக்கிறான்?'' என்று கேட்டார் என் தாத்தா.

''அவன் என்ன சொன்னாலும் கேட்கமாட்டேங்கிறான். அவன் உடம்பு என்னத்துக்கு ஆகிறது? அடி

லக்ஷ்மி, மணி என்ன ஆகிறது?'' என்று பாட்டி அம்மாவைக் கேட்டாள். அப்போதான் மணி ஒன்று அடித்தது. ''ஏ சீமா, படுத்துக்கோடா, அப்பா. நாளைக் குப் படிச்சுண்டாப் போறது'' என் ருள் எங்கள் அம்மா. ''ரொம்ப முக் கியமாப் படிக்கணும் அம்மா. அத னுலேதான் படிக்கிறேன்'' என்று சொல்லியவாறே படித்துக்கொண் டிருந்தேன்.

திடீரென்று பலத்த குரலுடன் என் அம்மா என்னைக் கூப்பிட் டாள். ''சீமா, மணி இரண்டடித்து விட்டது. படுத்துக்கப் போருயா இல்லே, நான் வந்து புஸ்தகத்தைப் பிடுங்கிண்டு வரட்டுமா?'' என்று சொல்லவே, வேண்டா வெறுப் பாய் விளக்கை அணைத்துவிட்டுத் தூங்கினேன்.

மறுநாள் காலை எட்டுமணி வரையிலும் எழுந்திருக்கவே இல்லை. அன்று காலை என் அப்பா ஊரிலிருந்து திரும்பி வந்தார். வந்த உடனே என்னைப்பற்றித் தான் அவர் விசாரித்தார். ''இன்னுமா சீமா தூங்குகிருன்?'' என்று சற்று பெரிய குரலிலேயே கேட்டார்.

உடனே என் பாட்டி, ''அடே அவனை ஒன்றும் சொல்லாதே. அவன் என்ன சமத்தாப் போயிட் டான் தெரியுமா? நீ போனப்பறம் சதா காலையிலும் இரவிலும் படிப் புத்தான். எடுத்த புஸ்தகத்தைக் கீழே வைக்கிறதில்லை. நான் ராத்திரி படுத்துக்கோ படுத்துக் கோன்னு அடிச்சுண்ட பிறகுதான். படுத்துண்டான்'' என்ருள் பாட்டி. அம்மாவும் பாட்டிக்கு ஒத்தாசையாக எனக்குப் பரிந்து பேசினுள்.

''சீமா ரொம்ப நன்ருகப் படிக் கிருன். நீ புத்திமதிகள் சொன்ன தெல்லாம் அவன் மனத்தில் இப் பொழுதுதான் உறைச்சிருக்கு'' என்று என் தாத்தா சொன்னுர். என் அப்பா இவைகளையெல்லாம் கேட்டுமிகவும் சந்தோஷம் கொண் டார்.

அப்பொழுது என் தங்கை கீதா ஒரு சிறிய கடிதத்தை எடுத்துக் கொண்டு வாசற் பக்கத்திலிருந்து வேகமாக உள்ளே ஓடிவந்தாள். ''கீதா, அதென்னம்மா கடிதம்? இங்கே கொண்டு வா'' என்று கேட்கவே, ''அப்பா, அது அண்ணு வுக்கு. யாரோ பையன் வாசலிலே நின்றுகொண் டிருக்கிருன். பதில் இப்பொழுதே வேணுமாம்'' என் ருள். என் அப்பா கீதாவின் கையிலிருந்த கடிதத்தை வாங்கி பிரித்துப் பார்த்தார். நானும் கண் விழித்துக் கொண்டு படுக்கை யில் உட்கார்ந்திருந்தேன்.

என்னையும் கடிதத்தையும் கண்ட தும் உடனே அவருடைய முகம் ஒருவித மாறுதல் அடைந்தது. ''சீமா, இங்கே வா!'' என்று உரக் கச் சப்தமிட்டுக் கூப்பிட்டார். வாரிச்சுருட்டிக்கொண்டு படுக்கை யிலிருந்து எழுந்து அப்பாவிடம் வந்தேன். ''அப்பா, நீ இப்போ தான் வந்தாயா?'' என்று நான் சாவதானமாகக் கேட்டேன். அதற்கு அப்பாவிடமிருந்து பதில் வரவில்லை. அதற்குப் பதிலாகத் தம் கையிலிருந்த கடிதத்தை என்னிடம் கொடுத்து, ''இதை எழுதினது யார்?'' என்று கேட் டார்.

''என் சிநேகிதன். பக்கத்துத் தெருவில் இருக்கிருன். அவன் தான்'' என்றேன்.

''அவன் குறிப்பிட்டிருக்கும் ஐந்து புஸ்தகங்களும் உன்னிடம் இருக்கின்றனவா?''

''ஆமாம்.''

''அவைகளைக் கொண்டு வந்து என் எதிரில் இப்பொழுது வை.''

கடிதத்தைப் பார்த்தவுடன் எனக்குத் தேள் கொட்டுவதுபோல இருந்தது. கடிதத்தில் குறிப் பிட்டிருந்த புஸ்தகங்கள் ஐந்தை யும் என் தகப்பனுர் முன்னிலையில் வைத்தேன்.

''இந்தப் புஸ்தகங்களைத்தான் நான்கு நாட்களாகப் படித்துக் கொண் டிருந்தாயா?'' என்று என் தகப்பனுர் கேட்ட கேள்வி என் உடலையே அதிரச் செய்தது. அப் பொழுது பொய் சொல்லுவதற்கும் எனக்குத் தைரியம் வரவில்லை. உண்மையை ஒப்புக்கொள்ளவும் பயமாக இருந்தது.

உடனே கீதா, ''ஆமாம் அப்பா, நேற்று நான் அவன் அறைக்குப் போனபோது இந்தப் புஸ்தகங் களைத்தான் அவன் படிச்சிண்டு இருந்தான். நான் கேட்டபோது என்னை விரட்டி அனுப்பிச்சான்'' என்றாள்.

என அப்பாவுக்குக் கோபத்தினால் உடல் ஆட்டம் கண்டது. திடீர் என்று என் அப்பா கோபத்துடன் மாறியதை அறிந்துகொள்ள முடியாமல் என் தாத்தா, பாட்டி, அம்மா, ஏன் டியூஷன் வாத்தியார் கூட ஸ்தம்பித்து நின்றார்கள்.

''அம்மா, உன் பேரன் மூன்று நாளா ராப் பகலாகப் படிச்சான்னு சொன்னாயே, உன் நாட்டுப் பெண்ணும் (நாட்டுப் பெண் என்பது என் அம்மாதான்) பெருமையாக இருந்தாளே. இந்தக் கடிதத்தைப் படிக்கிறேன் பார்'' என்று தன் கையிலிருந்த கடிதத்தைப் படித்தார்.

''அன்புள்ள சீமாவுக்கு, என்னிடமிருந்து வாங்கிப்போன 'திடீர் திருடன்' என்ற துப்பறியும் நாவல் ஐந்து பாகங்களையும் ராப்பகலாகப் படித்து முடித்துவிட்டு, நேற்றைத் தினமே தருவதாகச் சொன்னாய். எனக்கு அந்தப் புஸ்தகங்கள் அவசியமாக வேண்டியிருப்பதால் அவைகளை என் தம்பி வசம் உடனே திருப்பிக் கொடுத்தனுப்பவும்.

இப்படிக்கு
உமாபதி.''

நான், இந்தக் கடிதம் இப்படி என் அப்பா கைக்கு வரும் என்று எதிர்பார்க்கவில்லை. என் அப்பா என் கடிதத்தைப் பலர் முன்னிலையில் படித்தவுடன் அவமானத்தினால் விம்மி விம்மி அழத்தொடங்கினேன். உடனே என் அப்பா, ''ஏ சீமா ஏன் அழறே, செய்வதைச் செய்துவிட்டு? நீ யாரை ஏமாற்றினதாக நினைத்தாய்? யாரையும் ஏமாற்றி விட்டதாக எண்ணினாய் என்றால் நீ வாழ்க்கையிலேயே தவறு செய்தவனாவாய். சற்று யோசித்துப் பார்'' என்றார்.

அப்பா சொன்னதைக் கேட்டுப் பதில் சொல்ல முடியாமல் அவமானத்தினால் திகைத்து நின்றேன்.

''என்ன பேசாமல் இருக்கிறாய்! உனக்கு இன்னுமா தெரியவில்லை? உன்னையே நீ ஏமாற்றிக்கொண்டிருக்கிறாய். அவ்வளவுதான். இப்பொழுது தெரிகிறதா?''

அப்பா சொன்னது என் உடம்பில் ஏதோ ஒரு மின்சார சக்தி பாய்ந்ததுபோல் இருந்தது. அசையாமல் ஒரு தூணைப் பிடித்துக் கொண்டு நின்றேன்.

''ஆமாம், நீ சீமாவை இதுக்குக் கோபிச்சுக்க வேண்டியதுதான். ஆனால் யாரோ தடியன் உமாபதி என்றாயே; அவன் எதுக்காக இந்த நாவலையும், கதைப் புஸ்தகங்களையும் சீமாவுக்குக் கொடுத்துக் கெடுக்கிறான்?''

''என்ன அம்மா தெரியாமல் சொல்றே! இவன் கேட்டான், அவன் கொடுத்தான். அப்படியே தான் கதைப் புஸ்தகங்களைக் கொடுக்கட்டுமே; நல்ல அறிவு ஊட்டும் புஸ்தகங்களைப் படிக்க வேண்டியதுதான். அதற்குச் சமயா சமயம் கிடையாதா? பரீக்ஷை சமயத்திலா, பாடப் புத்தகங்களைக் கூடக் கவனிக்காமல் படிக்கவேண்டும்?'' என்று சொல்லிவிட்டு, ''ஏ சீமா, உன் நடத்தையிலிருந்து இன்று நடந்த சம்பவத்தை நீ எப்பொழுதும் மறக்கமாட்டாய் என்று நினைக்கிறேன். இந்த நாவல் புஸ்தகங்களைக் கொடுத்தனுப்பிவிட்டு, கீதாவுடன் கோவிலுக்குப் போய், சுவாமியிடம் நீ இன்று செய்த காரியத்தைச் சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வா. இந்த நாவல்களை எப்படி நீ தீவிரமாகப் படித்தாயோ, அப்படி உன் பாடப் புத்தகங்களின் மீது உனக்கு ஆர்வம் உண்டாக வேண்டும் என்று கடவுளிடம் பிரார்த்திக் கொண்டு வா. இதைவிட நான் வேறு என்ன சொல்லட்டும்;'' என்று என் தகப்பனார் சொல்லிக் கொண்டே மாடிக்குப் போய்விட்டார்.

கோவிலுக்குப் போய் நானும் கீதாவும் திரும்பி வந்தோம். அப்பொழுது என் தகப்பனார் வாசலில்

நின்றுகொண் டிருந்தார். கோவிலில் கண்ட என் டியூஷன் வாத்தியாரும் எங்களுடன் வீட்டுக்கு வந்தார். என் அப்பாவைப் பார்த்து அவர், ''சார், சீமா மிகவும் பயந்த சுபாவமாக இருக்கிருன். ரோடிலே நடந்து போய்க் கொண்டிருக்கும் பொழுதே எங்கேயோ எட்டி வந்து கொண்டிருக்கும் காளேயப் பார்த்து என் கைகளை இறுகப் பிடித்துக் கொள்ளுகிருன். கோவில் பெரிய மணியை அடிக்க ஆரம்பித்தால் திடுக்கிடுகிருன். அந்த விஷயமாக அவனைக் கொஞ்சம் கவனியுங்கள்'' என்று சொல்லிவிட்டுப் போனுர்.

''சீமா எதைப் பார்த்தாலும், கேட்டாலும் பயப்படுகிருன் என்று டியூஷன் வாத்தியார் சொல்லுகிருர். ஏன் பயப்பட மாட்டான்? 'திடீர் திருடன், பக்காத் திருடன், பலநாள் திருடன்' போன்ற நாவல்களைப் படிக்கட்டும்'' என்று அப்பா சொல்லி முடிப்பதற்குள் என் பாட்டி, ''ஏண்டா அப்பா இப்படிக் கத்தறே? அவன் சுபாவத்திலேயே பயந்தவனு இருக்கான். நாலைஞ்சு நாள் முந்தி, 'பாட்டி பாட்டி'ன்னு ஒரேஓட்டமா உளறிக் கொண்டே ஓடி வந்தான். ஏண்டா அப்பா என்று நான் கேட்டேன். கடைசியில் பார்த்தால் அங்கே மெதுவாகப் போய்க்கொண்டிருந்த ஒரு கறுப்புக் கரப்பான் பூச்சியைக் காட்டருன்'' என்று சொன்னுள்.

''அதுவும் ராத்திரி ஆகிவிட்டால் அவன் பயத்துக்குக் கேட்கவே வேண்டாம். தன் நிழலைப் பார்த்துப் பயப்படருன். ஜன்னல் கதவுகள் ஏதாவது திறந்திருந்தால் கூட சாத்து சாத்துன்னு கத்தருன். தெருவில் போகணும்னு, யாராவது கூட வந்தால்தான் மத்தியானத்திலேயே அவன் போவான். அவன் உடம்பிலே ஏதோ இருக்கு. டாக்டரிடம் காண்பித்து ஏதாவது மருந்து கொடுக்கணும்'' என்ருள் என் அம்மா.

இதைக் கேட்டு என் அப்பா தமக்குத் தாமே சிரித்துக்கொண்டார். அவர் எதற்காகச் சிரித்தார் என்று புரியவில்லை. ''அடுத்த தெருவிலே ஒரு பெரியவர் இருக்கிருர். அவர் இதுமாதிரியான விஷயத்துக்கெல்லாம் விபூதி, மிளகு, எண்ணெய் எல்லாம் மந்திரித்துக் கொடுப்பார். நான் அவரிடம் போய் விட்டு வருகிறேன்'' என்று வெளியே போனுர்.

வெளியே சென்றிருந்த என் தகப்பனுர் சற்று நேரத்திற்கெல்லாம் திரும்பி வந்தார். ''ஏண்டாப்பா என்ன மந்திரிச்சுண்டு வந்தே?'' என்று ஆவலுடன் கேட்டாள் என் பாட்டி.

''இல்லை இல்லை; அந்தப் பெரியவருக்கு நம்ம சீமாவை நன்ருகத் தெரியுமாம். 'உங்க வீட்டுப் பையன் நல்ல குண்டா இருப்பானே. அவனு இப்படிப் பயப்படருன்? குண்டா இருக்கிறவா பயந்தா விபூதி மந்திரத்திலே போகாது. அதுக்கு அவன் அடிக்கடி எதை உடம்பிலேயே அணிந்து கொள்ளுவது வழக்கமோ, அதைக் கொண்டு வந்தால் மூன்று நாள் ஜபத்திலே வைத்துக் கொடுக்கிறேன். பிறகு அதை அணிந்துகொண்டால் அவனுக்கு நன்ருகத் தைரியம் வரும்' என்கிருர். ஏ சீமா, இங்கே வா'' என்று என்னைக் கூப்பிட்டார். நான் அவரிடம் நெருங்கிச் சென்றேன். என்னை மேலும் கீழுமாகப் பார்த்துவிட்டு, ''நீ, இடுப்பிலே பெல்ட் போட்டிண்டிருக்கியே அதை எப்பொழுதும் போட்டுக் கொள்வாயோ?'' என்று கேட்டார்.

''ஆமாம்'' என்றேன்.

''அப்படியாளுல் சரி; அந்தப் பெல்டைக் கொண்டு வா; அதை அந்தப் பெரியவரிடம் கொடுத்து மூன்று நாள் பூஜையில் வைத்து மந்திரிச்சு கொடுக்கச் சொல்லுகிறேன்'' என்று என் பெல்டை என்னிடமிருந்து வாங்கிக்கொண்டு போனுர்.

(தொடரும்)

பையனும் பச்சைக் கிளியும்



அழ. வள்ளியப்பா

பையன்:

பச்சைக் கிளியே என்னிடம்
பறந்து ஓடி வா, வா,
அச்சம் ஏனோ கொள்கிறாய்?
அருகில் ஓடி வா, வா.

பச்சைக் கிளி:

வேண்டாம்; அங்கே வந்திட
விருப்ப மில்லை போ, போ.
கூண்டில் போடப் பார்க்கிறாய்.
கொடிய பையா போ, போ.

பையன்:

இல்லை, இல்லை. நானுமே
நல்ல பையன், வா, வா.
தொல்லை ஏதும் தந்திடேன்.
சொல்லை நம்பி வா, வா.

பச்சைக் கிளி:

வேலை யற்ற பையனே,
வேண்டாம். உடனே போ, போ.
சோலை நோக்கி நானுமே
செல்ல வேண்டும் போ, போ.

பையன்:

பழங்கள் நிறையத் தந்தேஉன்
பசியைத் தீர்ப்பேன். வா, வா.
துளியும் கெடுதல் செய்திடேன்.
துணிந்து அருகே வா, வா.

பச்சைக் கிளி:

பறந்து சென்று வேண்டிய
பழங்கள் தின்பேன் போ, போ.
பிறரின் கையைப் பார்த்துநான்
பிழைப்ப தில்லை போ, போ!

டியூஷன் வாத்தியார்

கா. சுந்தரி

அப்பா உக்கிரமூர்த்தியாக யிருந்தார். (மறந்து விட்டேன், அவர் பெயர் நரசிம்மம் என்பதை முதலில் சொல்லி யிருக்க வேண்டும்.) 'ஆ - ஊ' என்று அவர் ஏகமாக இரைந்துகொண் டிருந்தார். உள்ளேயிருந்து அம்மா, 'என்னவோ ஏதோ' என்று நடுங்கிக் கொண்டு அங்கு ஓடோடி வந்தாள். அப்பா கோபுவின் ப்ரோகிரஸ் ரிபோர்ட்டை வைத்துக் கொண் டிருப்பதைப் பார்த்தவுடன் வந்த வழியே திரும்பினாள்.

''இந்தா, உன் ஒரே புத்திர சிகாமணி வாங்கியிருக்கிற மார்க்கைப் பார்த்தாயா? மொத்தம் கூட்டினால் கூட 50 வரவில்லை. இந்த லட்சணத்தில் அடுத்த மாதம் பெரிய பரீட்சையில் என்ன எழுதுவான் இவன்?'' என்ற அப்பாவின் பேச்சை அம்மா கவனிக்கவேயில்லை. பாவம்; 'ட்யூஷன் வையுங்கள், வையுங்கள்' என்று சொல்லிச் சொல்லி அவளுக்குச் சலித்துப் போயிருந்தது. அம்மாவின் மௌனம் எதில் முடிந்திருக்கும் என்பதை நான் சொல்ல வேண்டாம் அல்லவா?

பெரிய பணக்காரரான நரசிம்மனின் ஒரே மகன் கோபு, படிப்பில் அக்கறை காட்டாதது ஆச்சரியமில்லை. அதைவிட ஆச்சரியமில்லாத விஷயம் அவன் தன் ட்யூஷன்வாத்தியாரிடம் காட்டிய அலட்சிய பாவம். இத்தனைக்கும் அவர் அவனுடைய வகுப்பு ஆசிரியர்கூட. ஆனால் அது அவனுக்கு ஒரு பிரமாதமான விஷயம் அல்ல.

அன்று வாத்தியார் சற்று தாமதமாக வந்தார். கோபு விதியே என்று பயந்துகொண்டு - வாத்தியாருக்கில்லை; தன்னுடைய தந்தைக்கு - அவர் எதிரில் உட்கார்ந்தான். ''பாடத்தைப் படி'' என்று கூறிவிட்டு மௌனத்தில்



ஆழ்ந்தார் அவர். சந்தோஷமாகப் புத்தகத்தைத் திறந்தான் கோபு. அதிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டு காற்றில் பறந்தது. அதை எடுத்துத் தன் பர்ஸில் திணித்துக்கொண்ட அவனையே பார்த்துக்கொண் டிருந்த வாத்தியார் 'ஹூம்' என்று முனகினார். 'ஒருவேளை தலைவலியோ? அப்படி யிருந்தால் போகச் சொல்லிவிட்டு நிம்மதியாக யிருக்கலாம்' என்று எண்ணி, ''என்ன ஸார்?'' என்று மிகுந்த அநுதாப முடையவன் போல் கேட்டான் கோபு. அவனுக்குப் பதில் சொல்லுவதற்கு முன் சிறிது நேரம் தயங்கினார் அவர். பிறகு மெதுவான குரலில், ''கோபு, என் மகன் படுத்த படுக்கையாக யிருக்கிறான். டாக்டர் ஓர் இஞ்செக்ஷன் போட்டால் பிழைத்துக்கொள்வாள் என்கிறார். ஆனால் அதன் விலை ஆறு ரூபாயாம். நீ அந்தப் பத்து ரூபாயைக் கொடுத்தால் நான் அப்புறம் திருப்பித் தந்துவிடுகிறேன்'' என்றார். அவர் பேசிவிட்டு அவமானத்தால் தலை குனிந்தார். அவர் உள்ளத்தில் அவன் கட்டாயம் கொடுப்பான் என்ற நப்பாசை துளிர்விட்டது. அவனோ சட்டென்று எழுந்தான். ''நீங்கள் வீட்டுக்குப் போய் நாளைக்கு வாருங்கள், ஸார். நான் இப்போ சினிமாவுக்குப் போகணும். பணம் வேண்டுமாமே பணம். பிச்சை கேட்பதிலே ஒரு கௌரவம். திருப்பித் தந்துடுவாராமே'' என்று அவர் முகத்தில் அறைந்தாற்போல் சொல்லிவிட்டு, தன்னுடைய சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே சென்று விட்டான் கோபு. கண்களில் ததும்பிய நீரைத் துடைத்துக் கொண்டு வெளியேறினார் வாத்தியார்.

மறுநாளும் அதற்கடுத்த நாளும் அவர் வரவேயில்லை. அவருடைய ஒரே மகன் இறந்துவிட்டதாக மற்றப் பையன்கள் கூறியதைக் கேட்ட பிறகுதான் அவர் தன்னிடம் சொன்னது உண்மை என்று அவன் உணர்ந்தான். தான் பணம் கொடுத்திருந்தால் ஒருவேளை அவர் மகன் பிழைத்திருக்கலாம் என்று தோன்றிற்று அவனுக்கு.

மூன்றாவது நாள். அவர் ட்யூஷனுக்கு வந்தபோது அவன் உண்மையிலேயே அவருக்குப் பயந்தான். அவரும் அவன் பயந்தபடியே தன் சுபாவத்திற்கு விரோத

மாகக் கடுமையாக நடந்து கொண்டார். ''பரீட்சைக்கு இன்னும் பத்து நாள்தான் இருக்கிறது. படி படி'' என்றதும் அவன் நடுங்கியே விட்டான். அவர் கையில் ஸ்கேலை எடுத்துக்கொண்டிருந்தார். 'கையில் பிரம்பு ஆசிரிய லட்சணம்' என்ற பழமொழியை அவர் அன்றுதான் தெரிந்துகொண்டாரோ?

கோபுவுக்குக் கோபம். ஆனால் வெளிக்காட்ட முடியுமா? பக்கத்தில் நரசிம்மன் வேறு உலாவிக் கொண்டிருந்தார்.

நாட்கள் வேகமாக ஓடின. பரீட்சை வருகிறது வருகிறது என்ற திகில், பரீட்சை நடக்கிறது நடக்கிறது என்கிற பயமாக மாறி, இறுதியில் பரீட்சை ஒழிந்தது, ஒரேயடியாகத் தொலைந்தது என்கிற நிம்மதியாகப் பரிணமித்தது. ஆனால் வானத்துச் சந்திரனைப் போல அந்த நிம்மதிக்கும் ஒரு களங்கம். அதுதான் ரிஸல்டைப் பற்றிய சந்தேகம். கோபுவுக்குத் தன்னுடைய ரிஸல்டைப் பற்றிச் சந்தேகமேயில்லை. தேறமாட்டோம் என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. சாகக் கிடந்த தம் மகனின் உயிருக்காக மானம், மதிப்பு, மரியாதை எல்லாவற்றையும் விட்டுவிட்டு மன்றாடியபோது பத்து ரூபாய் நோட்டை நான்கணாவாக மதித்துச் செலவு செய்யும் தம்முடைய பணக்காரச் சிஷ்யன் உதவ மறுத்துக் கேவலமாகப் பேசியதை அவர் மறந்திருப்பாரா என்ன? தான் 'பெயில்' ஆவதைப் பற்றிக் கோபுவுக்கு வருத்தமே கிடையாது. தன்னுடைய படிப்பா தனக்குச் சோறு போடப் போகிறது? இல்லை என்பது அவன் தீர்மானம்

எப்படியோ குறித்த நாளில் குறித்த நேரத்தோடு கோபு தைரியமாக 'ரிஸல்ட்' பார்க்கப் பள்ளிக்குக் கிளம்பினான். என்ன அதிசயமோ அவன் பாஸாகியிருந்தான். கண்ணைத் துடைத்துக் கொண்டு தன்னைத் தானே ஒரு முறை கிள்ளிவிட்டுக் கொண்டு 'பாஸ்' ஆனது நிச்சயம் என்று தெரிந்தவுடன் வேகமாக வீட்டுக்குத் திரும்பினான் அவன். அந்தச் சமயத்தில் வாத்தியார் எதிரில் வந்திருந்தால் அவன் அவருக்குப் பணத்தால் அபிஷேகம் செய்திருப்பானோ என்னவோ?

வீட்டின் வாசற்படியில் காலடி எடுத்து வைத்த கோபு உள்ளே தன் பேர் அடிபடுவதைக் கேட்டு அங்கேயே நின்றான். அவனுடைய வாத்தியார்தான் அப்பாவிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். ''உங்கள் பையன் கோபு எல்லாப் பாடங்களிலும் பெயில் மார்க்குதான் வாங்கியிருந்தான். தமிழிலும் கணக்கிலும் பாஸ் மார்க்கை நெருங்கியிருந்தான். அதை ஹெட்மாஸ்டருக்குக் காண்பித்துத்தான் அவனைப் பாஸாக்கினேன். ஹெட்மாஸ்டர் எப்படிப்பட்டவர் என்று உங்களுக்குத் தெரியும். அவரிடம் எவ்வளவோ கெஞ்சி மன்றாடி என் வேலையையே பணயம் வைத்து அவனை மேல் வகுப்புக்கு மாற்றச் சொன்னேன். இந்த இரண்டு மாதத்துக்குள் படிப்பில் அவனைக் கொஞ்சமாவது முன்னுக்குக் கொண்டுவந்தால்தான் என் வேலை நிலைக்கும். இத்தனையும் நீங்கள் தந்த சம்பளத்துக்காகச் செய்யவில்லை. எனக்கு வேறு குழந்தைகள் இல்லை. இவன் என் குழந்தையைப் போல. இந்த இரண்டு மாதத்துக்கும் நீங்கள் பணம் கூடத் தரவேண்டாம். என்னிடம் அவனைப் படிக்கச் சொல்லுங்கள் போதும். மிஸ்டர் நரசிம்மன், நான் ஒரு துர்ப்பாக்கியசாலி. எனக்குப் பிறக்கும் குழந்தைகள் எல்லாம் பெரிதாக வளர்ந்து வளர்ந்து சாகின்றன. கோபுவைப் பார்க்கும்போது ஆறுதல். வேறு ஒன்றுமில்லை.'' அவர் குரல் வரவரக் கம்மிற்று. வெளியிலே நின்ற கோபுவின் கண்களில் அவனையறியாமலேயே கண்ணீர் பெருகிவந்தது.

மைசூர்

எம். கே. ரங்கசாமி ஐயங்கார்

உங்கள் ஊரில் என்ன விசேஷம் என்று கேட்டால், நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பதில் சொல்வீர்கள். சிதம்பரம் கோயிலுக்கு ஈடேயில்லை; மதுரையிலுள்ள திருமலை நாய்க்கன் அரண்மனை மாதிரி வேறெங்கும் பார்க்க முடியாது; திருச்சிராப்பள்ளியிலுள்ள மலைமேலிருந்து பார்த்தால் நாலு பக்கமும் தெரியும் காட்சி அற்புதமானது; வேலூர்க் கோட்டையும் அகழியும் மிக விசித்திரம்; கோடைக்கானலில் கோடைகாலத்தில்கூட குளிர்ந்த காற்றும் அழகான தோற்றமும் கிடைக்கும். இவை எல்லாம் சரிதான். ஆனால் இவ்வளவு விசேஷங்களும் ஒரே ஊரில் பார்க்க முடியுமா? அப்படியும் ஓர் ஊர் இருக்கிறது. அதுதான் மைசூர்.

மைசூர் ஆச்சரியமான ஊர் என்று சொல்லுவது சகஜம். அதைப் போய்ப் பார்த்தால் நமக்கு ஆனந்தம் தருகிறது. மைசூரை நெருங்கும்போதே நம் கண்ணில் படுவது ஒரு பெரிய குன்று. மரங்களும் செடிகளும் அடர்ந்திருப்பதால் இது பச்சை பசேலென்றிருக்கிறது. அதன் மேல் வெண் மேகங்கள் நகரும்பொழுது என்ன அழகாய் இருக்கிறது. இரவில் மின்சார விளக்குகள் வரிசை வரிசையாகப் பிரகாசிப்பது ஒரு நேர்த்தியான காட்சி. இந்தக் குன்றின்மேல் ஏறுவதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று சுருக்கமானது. ஆனால் செங்குத்தாக ஆயிரம் படிகள் ஏறவேண்டும். மற்றொன்று வளைந்து வளைந்து செல்லும் அகலமான பாதை. வண்டிகளும் மோட்

டார்களும் சுலபமாகப் போகக் கூடிய வழி இது.

இந்தப் பாதையின் நடுவிலுள்ள வட்ட மேடையில் சற்று தங்கிப் பார்த்தால் மைசூர் முழுவதும் நன்ருகத் தெரியும். இந்தக் குன்றுக்கு அருகில் குதிரைப் பந்தய மைதானம் இருக்கிறது. அதற்கடுத்தாற்போல் ஒரு பெரிய குளம் இருக்கிறது. கன்னடத்தில் இதைத் தொட்டகேரே என்று அழைக்கிருர்கள். தொட்ட கேரே என்ருல், பெரிய குளம் என்று பொருள். ஊரின் நடுவில் வெள்ளை வெளேரென்று தெரிகிறதே, அதுதான் அரண்மனை. வெகு தூரத்தில் காவிரி நதியும் ஸ்ரீரங்கப்பட்டினமும் தெரிகின்றன.

நாம் இப்பொழுது மேலே போகலாம். இதோ, இந்த நந்தியைப் பாருங்கள். அடேயப்பா, எவ்வளவு பெரியது! பதினாறு அடி உயரம், இருபத்திரண்டு அடி நீளம். இவ்வளவு பெரிய நந்தி ஒரே கருங்கல்லில் செதுக்கியது. தஞ்சாவூரில் உள்ள நந்தியைவிட இதுதான் பெரியது. இன்னும் மேலே போவோம். இங்கே காணும் கோயில்தான் சாமுண்டேஸ்வரி கோவில். இந்தக் குன்றுக்கும் அதே பெயர்தான். சாமுண்டி என்பது பார்வதிதேவியின் பெயர்களில் ஒன்று. இந்தக் கோவிலுக்குள் அம்பிகையைத் தரிசிக்கலாம். சிங்கத்தின்மேல் வீற்றிருக்கும் காட்சி என்ன அழகாய் இருக்கிறது; இந்தக் கோபுரமும் கோவிலும் மைசூர் அரசர்களால் கட்டப்பட்டவை.

சாமுண்டேஸ்வரி கோயிலும் மகிஷாசுரனும்

இங்கே நிற்கும் விசித்திரமான சிற்பத்தைப் பாருங்கள். இவன் ஓர் அசுரன். கையில் பாம்பு. இந்த மகிஷாசுரனைப் பார்வதி சண்டையிட்டுக் கொல்கிருள். பார்வதிக்கு இதனுல் மகிஷாசுர மர்த்தனி என்று பெயர். இதைக் கல்லில் மிகவும் அழகாகச் செதுக்கியிருப்

பதை நீங்கள் மாமல்லபுரத்தில் பார்த்திருப்பீர்கள். மைசூரின் பெயரே மஹிஷ ஊர் என்பது சிலர் அபிப்பிராயம். இதோ, இந்தக் குன்றின்மேல் ஒரு குன்று. இதற்கு லலிதாத்ரி என்று பெயர். லலிதாத்ரி அழகான மலை. அதன் மேலுள்ள கட்டடத்தில் அரசர்கள் கோடைகாலத்தில் தங்கி வந்தார்கள்.

இங்கிருந்து இறங்கி மைசூர் போகலாம். இந்தப் படிகளின் வழியாகவே வந்தும் நமக்கு சிறிதும் வேர்க்கவேயில்லையே. இந்த ஊரின் சீதோஷ்ண ஸ்திதி உடலுக்கு மிகவும் ஆரோக்கியமானது.

மலைமீதிருந்து பார்த்தபொழுது சிறிய வட்டமாகத் தெரிந்த குதிரைப் பந்தய மைதானம் எவ்வளவு பெரிதாக இருக்கிறது, பாருங்கள்.

இந்தத் தோட்டம் மிகவும் விசேஷமானது. உயரமான மரங்களும் பலவித நிறங்களுடனும் கூடிய புஷ்பச் செடிகளும், கொடிகளும், நம் கண்களைக் கவருகின்றன.

எண்ணூறு வருஷங்களுக்குமுன் இந்தப் பிரதேசத்தை ஹொய்சால மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். ஹொய்சாலர்கள் என்று இவர்களுக்குப் பெயர் வந்ததற்குக் காரணம் விசித்திரமானது. இந்த வம்சத்து மன்னர்களில் ஒருவர், அவருடைய குருவுடன் பேசிக்கொண்டிருந்த சமயத்தில் ஒரு புலி தென்பட்டதாம். குரு அரசனைப் பார்த்து, ''கொல் புலியை'' என்று கன்னடத்தில் ''ஹோய், சால'' என்று சொன்னவுடன், அரசன் தன் வாளால் அதைக் கொன்றுவிட்டான். அதை மெச்சி குரு இவனை 'ஹொய்சாலா' என்று அழைத்தார். இந்தப் பெயர் இந்த வம்சத்து அரசர்களுக்கு வந்துவிட்டது. இந்த மன்னர்கள் துவார சமுத்திரம் என்கிற ஊரைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டார்கள். துவார சமுத்திரம் இருந்த இடத்தில் எஞ்சியிருந்த சிற்றூருக் தக் கன்னடத்தில், ஹளயபீடு என்று பெயர். தமிழில் பழைய வீடு என்று அர்த்தம். என்ன விசித்திரம்! ஊர்கள் மாறியதுபோல், பெயர்கள்கூட மாறிவிடுகின்றன.



சித்திரசாலை

இந்த அரசர்கள் கட்டின கோவில்கள் சிற்ப விசேஷமுள்ளவை. அவைகளில் கர்ப்பக்கிருஹத்தைச் சுற்றி வரிசை வரிசையாக ஆயிரக்கணக்கான சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவைகள் பார்ப்பதற்குத் திறந்த வெளியில் உள்ள



மணிக்கூண்டு

ஒரு சிற்பக் களஞ்சியமாகக் காட்சி யளிக்கின்றன.

இந்த ராஜ்யத்தைப் பிறகு உடை யார் வம்சத்து மன்னர்கள், மைசூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆளத் தொடங்கினர்கள். அவர்களில் சிக்கதேவன் என்னும் அரசன் சில ராஜ்யங்களை வென்று மைசூர் ராஜ்யத்தைப் பெரிதாக்கி னன். ஆனல் அவனுக்குப் பிறகு ஆண்ட அரசர்கள் சாமர்த்தியக் குறைவானவர்கள். அப்போது சமயம் பார்த்துக்கொண் டிருந்த ஹைதர் அலி ராஜ்யத்தைக் கைப் பற்றிக்கொண்டான். அவன் மகன் திப்பு சுல்தான் பிரிட்டிஷ்காரர் களால் தோற்கடிக்கப்பட்டு, பிறகு உடையார் வம்சத்தாருக்கே ராஜ் யம் கொடுக்கப்பட்டது.

அடுத்தபடி நாம் கோட்டைக்குள் போய் அரண்மனையைப் பார்க்க வேண்டும். இங்கிருந்த பழைய அரண்மனையையும், ஊரையும் திப்பு சுல்தான் இடித்துத் தள்ளி விட்டான். இந்த அரண்மனை யைக் கட்டி நூற்றிருபது வருடங் கள்தான் ஆகின்றன. இதன் வாயி லும், அதிலுள்ள சித்திர வளைவு களும் என்ன நேர்த்தியாக இருக் கின்றன! இதன் உச்சியில் உள்ள சிகரம் தரை மட்டத்திலிருந்து 125 அடி உயரமுள்ளது. மைசூர் ராஜ் யத்தில், தசரா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அந்த விழாவின்போது இந்தக் கோட்டை யில் ஆயிரக்கணக்கான மின்சார விளக்குகளை ஏற்றி வைப்பார்கள். அப்பொழுது அதன் அழகு ஜகஜ் ஜோதியாய் விளங்கும். இந்த அரண் மனையின் கீழ்ப்பாகத்தில் ஒரு கொலு மண்டபம் உள்ளது. அதிக சிற்ப வேலைப்பாடுகளுடனும், பல வர்ணவிசித்திரங்கள் தீட்டப்பெற்ற தூண்களுடனும் மிகவும் நேர்த்தி யாய் இருக்கிறது. இவைகளைக் கட்டுவதற்கு ஆக்ராவிலிருந்து சிற்பிகளை வரவழைத்தார்களாம். இந்தத் தர்பார் ஹாலுக்கு, அம்பா விலாஸம் என்று பெயர். அரண் மனைக்கு முன்பாக இருக்கும் இந்தச் சலவைக் கல் மண்டபம் எவ்வளவு அழகாக இருக்கிறது! இதன் நடு வில் நிற்கும் அரசனின் சிற்பத்தைப் பாருங்கள். இதை அடுத்துள்ள மணிக்கூண்டு எவ்வளவு உன்னதமா யுள்ளது.

அடுத்தபடியாகப் பார்ப்பது சித் திரசாலை. இதில் மிகவும் அபூர்வ மான வர்ணச் சித்திரங்களையும், சிற்பங்களையும் பார்க்கலாம். ஜகன் மோஹன் மஹால் என்பது இதற் குப் பொருத்தமான பெயர்தான்.



பிருந்தாவனம்

ஒரே கல்லில் செதுக்கிய பெரிய நந்தி

இந்த ஊர் மிருகக்காட்சி சாலையில் ஒரு விசேஷம். மிருகங்களைச் சிறு கூண்டுகளிலும், அறைகளிலும் அடைக்காமல் எதேச்சையாய் உலாவித் திரியும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நடுநடுவில் உள்ள செடிகளும், கொடிகளும் இதன் வனப்பை அதிகரிக்கின்றன. இந்த ஊரில் உள்ள ஒவ்வொன்றையும் நன்றாகப் பார்ப்பதற்குப் பல நாட்கள் பிடிக்கும்.

இனி நாம் முக்கியமாகப் பார்க்க வேண்டியது கிருஷ்ணராஜசாகர். காவிரி நதி மைசூருக்கு எட்டு மைல் தூரத்தில் ஓடுகிறது. அதிலிருந்து இந்த ஊருக்கு ஒரு சிற்றாறு கொண்டுவர, பூர்ணையா என்பவர் திவானாக இருந்த பொழுது பெருமுயற்சி செய்தார். நதியைவிட ஊர் அதிகமான உயரத்தில் அமைந்திருப்பதால் இது பலனளிக்கவில்லை. ஆனால் அதை விட வேறொரு முயற்சி வெற்றி பெற்றது.

காவிரியின் இரு பக்கங்களிலும் குன்றுகளும், மலைப்பிரதேசமுமாய் இருப்பதைப் பார்த்து, திப்பு சுல்தான் இதன் நடுவில் ஓர் அணையைக் கட்டி நீர்த்தேக்கம் ஒன்று உண்டு பண்ணலாம் என்று யோசித்தானும். அப்படி ஒரு கல்வெட்டுக் கூட இருக்கிறது. ஆனால் அவன் அதைச் செய்யவில்லை. ஐம்பது வருடங்களுக்கு முன்னால் கிருஷ்ணராஜ உடையார் அரசாளும்பொழுது இது கட்டி முடிந்தது. இது 130 அடி உயரமும், ஒன்றேமுக்கால் மைல் நீளமும் உள்ளது. இதனால் தேக்கப்பட்ட தண்ணீர் ஒரு பெரிய சமுத்திரம் மாதிரி வியாபித்திருக்கிறது. இந்தத் தேக்கத்தின் நீரைக் கொண்டு ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்புள்ள நிலங்களைச் சாகுபடி செய்கிறார்கள். இந்த அணை கண்ணம்பாடி என்ற கிராமத்திற்கு அருகில் கட்டப்பட்டிருப்பதால், இதற்குக் கண்ணம்பாடி அணைக்கட்டு என்றும், நீர்த் தேக்கத்திற்கு, கிருஷ்ணராஜசாகரம் என்றும் பெயரிட்டார்கள்.

இது தவிர, அணையை அடுத்து ஒரு பெரிய பூந்தோட்டத்தையும் அமைத்திருக்கிறார்கள். நீர்த் தேக்கத்திலிருந்து அணையில் உள்ள கால்வாய் வழியாகத் தண்ணீர் ஓடைகளாகவும் பலவிதமான விசித்திரச் செயற்கை நீரூற்றுக்களாகவும் பாய்கிறது.

பலவிதங்களிலும் சிறந்த ஊர் மைசூர்; சிறந்த ராஜ்யம் மைசூர்*

* அ. இ. ரேடியோவில் பேசப்பட்டது.

கோடாலிக் காம்பு

தங்கமணி

"வானவெளியிலே, கிழக்குத் திசையை நோக்கித் தேம்பித் தேம்பி அழுதவாறே பறந்து போய்க்கொண்டிருந்ததாம் ஓர் ஆந்தை. அப்போது எதிரே பறந்து வந்த ஒரு கருங்குயில் ஆந்தையைச் சந்தித்துக் கேட்டதாம்:

'ஆந்தைத் தோழரே, ஆந்தைத் தோழரே. இப்போது எங்கே போகிறீர்? ஏன் அழுகிறீர்?'

'இந்தத் தென்திசை வாழ் பறவைகளுக்கு உணர்ச்சியைத் தொடும் என் குரலைப் பிடிக்கவில்லை; அதனால், பறவைகள் என்னை வெறுக்கின்றன. ஆகவே, நான் கிழக்கே போய் விடுகிறேன்' என்று விசும்பியதாம்.

'அன்புள்ள ஆந்தைத் தோழரே: இப்போது நீர் திசைவிட்டுத் திசை ஓடுவது சரியல்ல..இப்போது நீர் செய்யவேண்டிய காரியம் இதுதான்: அச்சத்தையும் அருவருப்பையும் தரும் உம்முடைய அவலக் குரலை, நீர் உடனே மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் நீர் எந்தத் திசைக்குச் சென்றாலும் சரி, அங்குள்ள பறவைகளால் நீர் வெறுக்கத்தான் படுவீர்!' என்றதாம் கருங் குயில். இந்தக் கதையைப் போலத்தான் இருக்கிறது உன்னுடைய கதையும்!'' என்று கூறிவிட்டு நெட்டுயிர்த்தான் சோணாசலம்.

''விஷயத்தைப் புரியும்படிக் கூறாமல் கதை அளக்கிறாயே!..'' பிஸ்கோத்துகளை அள்ளி டப்பாவில் கொட்டிக்கொண்டே தமாஷாகப் பேசினான், குப்பன்.

''குப்பா, நீ இந்தப் பிஸ்கோத்துக் கம்பெனியில் ஐந்து வருஷமாக விசுவாசத்துடன் உழைத்து வருகிறாய். ஆனால் நம்முடைய முதலாளி உன் உழைப்பை உணர்ந்து 'பாவம், பையன் பாடுபடுகிறானே' என்று பரிவு காட்டுவதுமில்லை; 'ஹரிஜனப் பையனாயிற்றே' என்று அன்பு காட்டுவதுமில்லை. ஏன் - அவர் உன்னை லட்சியப்படுத்துவதே கிடையாது!....''

''லட்சியப்படுத்தட்டும், அலட்சியப்படுத்தட்டும்; அதைப் பற்றி அக்கறையில்லை! மாதம் பிறந்த முதல் தேதியன்று சாயந்தரம் ஆறு மணிக்குள் சுளையாக இருபது

ரூபாய் கொடுத்து விடுகிறாரே. என்னுடைய உழைப்புக்கு அது போதாதா?''

''ஹூம்!..மாதம் முப்பது நாட்களும் ஓயாமல் பாடுபடும் உனது உழைப்பு இருபது ரூபாய்தானா பெறும்? யோசித்துப் பார், குப்பா. நான் இந்தக் கம்பெனியில் குமாஸ்தா வேலை பார்க்கிறேன். வேலையில் சேர்ந்து ஒரு வருஷந்தான் ஆகிறது. எனக்கு ஆரம்பச் சம்பளம் முப்பது ரூபாய். ஆனால், கடந்த ஐந்து மாதங்களாக என்னுடைய சம்பளத் தொகை அறுபது ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால், ஐந்து வருஷங்களாக ஓயாமல் உழைத்து வரும்

உனக்கு—ஆரம்பச் சம்பளமும் இருபது ரூபாய்தான்; ஐந்து வருஷங்களுக்குப் பிறகு இன்றும் அதே இருபது ரூபாய்தான்; குப்பா! அந்த ஆந்தையைப் போல நீயும் உனது அடிமை மனப்பான்மையைப் புரட்சி மனப்பான்மையாக மாற்றிக் கொள்ளாதவரையிலும், இதே..இருபது ரூபாய்தான் சம்பளமாய்க் கிடைத்து வரும்!''

குப்பன் திகைத்தான், விழித்தான். சோணாசலத்தின் உணர்ச்சியைத் தொட்டிழுக்கும் பேச்சு, அவன் உள்ளத்தைச் சிலிர்க்கச் செய்தது. அவன் சற்று நேரம் மௌனமாயிருந்தான். பிறகு, வேர்த்துக் கொட்டிய முகத்தைத் துடைத்துக்கொண்டான். வறண்ட உதடுகளை நாவினால் ஈரப்படுத்திக் கொண்டான். ''ஆமாம், சோணாசலம், நீ சொல்வது அவ்வளவும் சரி! எனக்கு இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிகிறது. என்னவோ, 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்று பெரியவர்கள் சொல்லுகிறார்களே என்று சும்மா யிருந்துவிட்டேன். ஆமாம், சோணாசலம், இப்போது என்னுடைய சம்பளம் உயர நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று ஆவலுடனும் பரபரப்புடனும் கேட்டான்.

சோணாசலம் சொன்னான்:

''சாயந்தரமாக முதலாளி வந்தவுடன் அவரிடம் நேரே சென்று, 'எனக்கு ஐம்பது ரூபாய் சம்பளம் வேண்டும்' என்று கம்பீரமாகக் கேள். கொடுக்க முடியாது என்றால் பேசாமல் வந்துவிடு..''

''அப்புறம்..?''

''வேலைக்கு வராதே; நின்று விடு!''

''அப்புறம்..?''

''மறுநாளே உன்னை அழைத்து வரும்படி முதலாளி என்னை அனுப்பி வைப்பார். ஏனென்றால், உன்னைப்போன்ற ஒரு நல்ல உழைப்பாளி கிடைப்பது வெகு அபூர்வம்!''

''சரி உன்னுடைய யோசனைப்படியே செய்கிறேன். எத்தனை காலத்துக்குத்தான் இந்த இருபது ரூபாய்ச் சம்பளத்திலேயே அவதிப்பட்டுக்கொண்டிருப்பது?''

அதன் பிறகு குப்பனுக்கு வேலையே ஓடவில்லை! அவன் முதலா

ளியின் வருகையைப் பேராவலுடன் எதிர்பார்த்துத் துடித்துக் கொண்டிருந்தான்.

மாலை வந்தது. முதலாளியும் வந்தார். குப்பன் ஓடினன்:

''ஐயா..''

''என்ன பையா?''

''நீங்கள் கொடுக்கும் இருபது ரூபாய்ச் சம்பளத்தில் காலத்தை ஓட்ட முடியவில்லை. அரை வயிறும் கால் வயிறுமாக அவதிப்படுகிறேன். என்னுடைய சம்பளத் தொகையை ஐம்பது ரூபாயாக உயர்த்துங்கள்''

''முடியாது!''

''அப்படி யென்றல் என்னல் வேலை செய்ய இயலாது!''

''சரி விலகிக் கொள்!'' குப்பனுக்குச் சேரவேண்டிய சம்பளத்தைக் கொடுத்து வேலையைவிட்டு விலக்கிவிட்டார் முதலாளி.

* * *

மதப் பாடசாலையிள்ள ஓர் ஆசிரியர் தம் வகுப்பிலுள்ள மாணவர்களை நோக்கி, ''மோட்சலோகத்துக்குப் போக விரும்புகிறவர்கள் யார்-யார்? விரும்புகிறவர்கள் கையைத் தூக்குங்கள்'' என்ருராம்.

எல்லா மாணவர்களும் கைகளைத் தூக்கிக்கொண்டு ''நான், நான்!'' என்று துடித்தார்களாம்!

ஆனல், அவர்களுள் ஒரே ஒரு சிறுவன் மட்டும் கையையும் தூக்காமல், வாயையும் திறவாமல் கம்மென்று புளிமூட்டை மாதிரி இருந்தானும். இதைக் கண்ட ஆசிரியர் திகைத்துப் போய், அந்தப் பையனைப் பார்த்துக் கேட்டாராம்:

''அடேய், எங்கே நோக்கினும் இன்பமயமாய்க் காட்சியளிக்கும் சொர்க்க லோகத்துக்கு வர நீ விரும்பவில்லையா?''

''இல்லை..''

''ஏன்?''

''பள்ளிக்கூடம் விட்டதும் நேரே வீட்டுக்கு வரும்படி என் அப்பா சொல்லி வைத்திருக்கிருர். அதனல்தான் நான் சொர்க்கத்துக்கு வர முடியாது என்கிறேன்'' என்ருனும், அந்தச் சிறுவன்!

இந்தக் கதையைச் சொன்ன நல்லமுத்து, குப்பனைப் பார்த்து, ''யார் எத்தகைய ஆசை வார்த்தைகள் பேசினலும் புத்தி மங்காமல் தன் காரியமே கண்ணுயிருந்து நிதானத்துடன் நடந்து கொண்ட அந்தச் சிறுவன் எங்கே? சோணசலம் சொன்னன் என்று அறிவு கெட்டதனமாக வேலையையும் இழந்து தவிக்கும் நீ எங்கே? அந்தத் தலைவர் சொன்னராம்; இந்தத் தொண்டர் கேட்டாராம்! ஹூம்; வேலையைவிட்டு நீங்கிய இந்த இரண்டு வார காலமாக வேலை தேடி அலைக்கழிவது நீயா, அவனு? 'சொல்வார் சொன்னலும் கேட்பாருக்குப் புத்தி வேண்டும்' என்று பெரியவர்கள் சும்மாவா சொல்லியிருக்கிருர்கள்! அவனெரு தேர்ந்தெடுத்த சதிகாரன்! நீயொரு வடிகட்டின முட்டாள்!'' என்று நட்புரிமையுடன் கோபித்துக் கொண்டான்.

''நல்லமுத்து, ஏண்டா இப்படி ஆத்திரப் படுகிருய்? சாதகமாக நடக்க வேண்டிய காரியம், பாதகமாக நடந்துவிட்டது. அதற்கு யாரை நொந்து என்னடா பண்ணுவது? எல்லாம் என்னுடைய பொல்லாத காலம்!'' என்று பெருமூச்செறிந்தான் குப்பன்.

''ஆமாம், ஆமாம்! சிந்திக்கத் தெரியாத மடையன்களுக்கு எல்லாம் எந்தக் காலமும் பொல்லாத காலமாகத்தான் இருக்கும்! ஆமாண்டா, குப்பா, நீ வேலையை விட்டு நீங்கிய பின் அந்தச் சோணசலத்தை எப்போதாவது சந்தித்தாயா?'' என்று பேச்சைத் திருப்பினன் நல்லமுத்து.

''ஓ சந்தித்தேனே!''

''என்ன சொன்னன்?..''

''என் வேலையைப்பற்றித்தான்: 'இந்தப் பிஸ்கோத்துக் கம்பெனியை நம்பி உயிர் வாழத்தான கடவுள் உன்னைப் படைத்தார்? இந்த வேலை போனல் இன்னெரு வேலை. இந்தக் கம்பெனி இல்லையென்ருல் இன்னெரு கம்பெனி. நீ எதற்கும் கவலைப் படாதே. மனிதன் துன்பப் படுவதும், இன்பப்படுவதும் கடவுளின் விளையாட்டு' என்ருன். அப்புறம் என்னை ஓட்டலுக்கு அழைத்துப்

போனான். வயிறு நிறையப் பலகாரம் வாங்கித் தந்து, தைரியமாக இரு என்று ஆறுதல் கூறி அனுப்பி வைத்தான். நல்லமுத்து, நீ நினைப்பதுபோல் சோணாசலம் கெட்டவனல்ல; மிகவும் நல்லவனடா!'' என்றான் குப்பன்.

''குப்பா, சோணாசலம் நல்லவனாயிருக்கலாம்; ஆனால் சில சந்தர்ப்பங்களில் கெட்டவர்கள் நல்லது செய்வதுபோலவே, நல்லவர்கள் கெட்டது செய்வதும் உண்டு! குப்பா, அந்தப் பிஸ்கோத்துக் கம்பெனியில் நீ செய்திருந்த வேலையை இப்போது யார் செய்வது தெரியுமா?''

''ஓ..தெரியுமே! செங்கழனி என்ற பையன். பதினைந்து ரூபாய் சம்பளத்துக்கு ஒப்புக்கொண்டு செய்கிறானாம் மடையன்!''

''அந்தச் செங்கழனிக்கு அந்த உன்னுடைய வேலை எப்படிக் கிடைத்தது, தெரியுமா?''

''.........''

''அது தெரியாது! தெரிந்திருக்க வகையும் இல்லை! ஆனால், தெரிந்தால்—சோணாசலத்தை நல்லவன் என்று போற்றமாட்டாய்; துரோகி என்று தூற்றியிருப்பாய்! சதிகாரா என்று சபித்திருப்பாய்! கருங்காலி என்று கடிந்திருப்பாய்!''

''என்ன சொல்லுகிறாய், நல்லமுத்து?''

''உன்னைக்கொண்டே உன்னை வேலையிலிருந்து விரட்டிவிட்டு, செங்கழனியிடமிருந்து பத்து ரூபாய் லஞ்சம் வாங்கிக்கொண்டு, அவனுக்கு உன்னுடைய வேலையை உன்னிடமிருந்து நயவஞ்சகமாகப் பறித்துக் கொடுத்திருக்கிறான், அந்த நச்சுப் பூச்சியான சோணாசலம்!''

''ஆ..அப்படியா!'' என்று நெஞ்சு பதைக்கக் கூவினான் குப்பன். பிறகு..

* * *

“ஒரு குடியானவனின் குடிசைக்குப் பின்புறத்தில் ஒரு பெரிய கருநாகம் வசித்து வந்ததாம். குடியானவன் அந்தப் பாம்புக்குப் பாலும் முட்டையும் கொடுத்து அன்புடன் வளர்த்துப் பூஜை செய்து வந்தானாம். ஒரு நாள், 'ஓ நாக தெய்வமே! நான் சேமித்து வைக்கும் தானியங்களை நாசப்படுத்தும் சுண்டெலியின் அட்டகாசத்தை அடக்கி என் தானியங்களைக் காப்பாற்று' என்று குடியானவன் கருநாகத்தை வேண்டிக்கொண்டானாம்.

"மறு நாள், கரு நாகம் குடியான வனின் வேண்டுகோளுக்கிணங்கி தானியங்களை நாசப்படுத்திவரும் அந்தச் சுண்டெலியைப் பிடித்துக் கொண்டதாம். சுண்டெலி பயந்து நடுங்கி, 'ஐயா! ஓ....நாக ராசாவே! என்னை விட்டுவிடேன்! என்னை விட்டுவிடேன்! உன்னுடைய பசிக்காக என்னைக் கொல்லுகிருயே!' என்று கதறியதாம். "அதைக் கேட்ட கரு நாகம் சொன்னதாம்: 'ஓ..சுண்டெலியே! என் பசிக்காக மட்டும் உன்னைக் கொல்லவில்லை; என் பக்தனுன ஏழைக் குடியானவனின் வேண்டுகோளுக்காகவும் உன்னைக் கொல்லுகிறேன்!..'

"'ஐயோ! இடது கைக் காயத்தை ஆற்றுவதற்காக வலது கையைக் காயப்படுத்துவதா..!'

'அந்த மடத்தனந்தான் இன்றைய உலகத்தின் புத்திசாலித்தனம். ஒருவனுக்கு நன்மை செய்யும் செயலால் இன்னொருவனுக்குத் தீமையுண்டாவது சகஜமே! எவனுடைய மனமும் நோகாமல் எவ்வித நன்மையையும் எவரால் தான் செய்யமுடியும்?' என்று கூறிக்கொண்டே சுண்டெலியைக் கபக்கென்று விழுங்கித் தொலைத்ததாம் கரு நாகம். அந்த நாகத்தினுடைய கதைதான் என்னுடைய கதையும்!" என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே ஒரு முழு ஜாங்கிரியை அப்படியே வாயில் திணித்துக்கொண்டான் சோணுசலம்.

"என்ன சொல்லுகிருய், அண்ணுச்சி? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!"

"அதாவது, நான் உனக்குச் செய்த நன்மை குப்பனுக்குத் தீமையாய் ஆகிவிட்டது என்கிறேன். என்ன பண்ணுவது? சில சமயங்களில் நன்மை தீமையாகவும், தீமை நன்மையாகவும் ஆவது இயல்புதானே! என்னுடைய உபதேசத்தைக் குப்பன் நம்பினுன்; வேலையை இழந்தான்! 'பத்து ரூபாய் முன் பணம் கொடுத்தால் வேலை வாங்கித் தருகிறேன்' என்றேன்; அதை நீ நம்பினுய்; பணமும் கொடுத்தாய். வேலையிலும் அமர்ந்துவிட்டாய்! இன்றைக்குக் குப்பனுடைய இடத்தில் செங்கழனி! 'மற்றவனுடைய மனத்தை வருத்தினுல்தான்' தன்னுடைய மனத்தைச் சந்தோஷப்படுத்த முடியும்!' என்று ஹிட்லரோ-முசோலினியோ-எவனே ஒருவன் சொன்னுனும். இதை நேற்று என்னுடன் பேசிக்கொண்டிருக்கையில் குப்பனுடைய நண்பன் நல்லமுத்து சொன்னுன். அந்த எவனே ஒருவனுடைய வாயில் லட்டு உருண்டையைத் தான் திணிக்கவேண்டும்!"

"அந்த எவனே ஒருவனின் பொன் மொழிக்குத் தகுந்தாற் போல் செயலாற்றி எனக்கு வேலை வாங்கிக் கொடுத்த உன் வாயில் பாதாம் அல்வாவைத்தான் திணிக்க வேண்டும்!" பரிசாரகன் அப்போதுதான் கொண்டுவந்து வைத்த பாதாம் அல்வாவை அப்படியே அள்ளி சோணுசலத்தின் வாயில் ஊட்டினுன் செங்கழனி.

அப்புறம்—

குமாஸ்தா சோணுசலமும், ஆபீஸ் பையன் செங்கழனியும் ஐயா ஓட்டலில் மூக்குப் பிடிக்க விழுங்கிவிட்டு வெளியே வந்தார்கள்.

ஆனுல், அதற்குள்—

"முதலாளியின் அடிவருடிகள்!"

"ஒழிக!.."

"காட்டிக் கொடுக்கும் கருங்காலிகள்!"

"ஒழிக!.."

"குலத்தைக் கெடுக்கும் கோடாலிக் காம்புகள்..!"

"அடியோடு ஒழிக!.."

ஏதோ, ஒரு கம்பெனித் தொழிலாளிகள் கொடி பிடித்துக் கும்பியெரியக் கொக்கரித்தவாறே சாரி சாரியாகப் போய்க் கொண்டிருந்தார்கள் .. போய் விட்டார்கள்!..

சற்றுக் கழித்து, செங்கழனியை நோக்கிச் சோணுசலம் கேட்டான்:

''செங்கழனி, கோடாலிக் காம்பு என்றால் அர்த்தம் என்னடா..?''

செங்கழனி சொன்னான்: ''ஒரு விறகு வெட்டி இரும்புக் கோடாலி ஒன்றை எடுத்துக்கொண்டு ஒரு மரத்தினிடம் சென்றானாம். 'மரமே மரமே, இந்தக் கோடாலிக்குப் பிடிபோட ஒரு மரக் காம்பைக் கொடேன்' என்று கேட்டானாம். மரம் 'கொடுக்க மாட்டேன்' என்றதாம். ஆனால், அந்த மரத்திலிருந்த ஒரு கிளை 'இதோ, என்னை உபயோகித்துக்கொள்' என்றதாம். உடனே அந்தக் கிளையை ஒடித்துக் கோடாலிக்குப் பிடியாக உபயோகித்துக் கொண்டு, அந்த மரத்தையே வெட்டிச் சாய்த்தானாம், அந்த விறகு வெட்டி!''

உடனே, ஒரு முழக்கம்:

''மரத்தோடு மரமாயிருந்து கொண்டே மரத்தை அழிக்க உதவிய அந்த நன்றி கெட்ட மரக் காம்பைப்போல, நண்பனுக்கு நண்பனாயிருந்துகொண்டே ஒரு நண்பனுக்கு நயவஞ்சகம் புரிந்தாயே நீ—அட, கோடாலிக் காம்பே! துரோகி! தூ..நீயும் ஒரு மனிதனா!..''

திடுக்கிட்டு நடுங்கிய சோணாசலமும் செங்கழனியும் திரும்பிப் பார்த்தார்கள்.

மறு விநாடி—?

இத்தனை நேரமும் அவர்கள் பேசிக்கொண்டதை யெல்லாம், அவர்களுக்குப் பின் புறத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு பையன் கன்னத்தில் அறைந்து விட்டிருந்தாலும் பரவாயில்லை; சோணாசலத்தில் வெளிறிய முகத்தில் காறித் துப்பிவிட்டுப் புயல் வேகத்தில் விரைந்து சென்று தெருத் திருப்பத்தில் மறைந்து போனான்!

யார் அவன்—?

'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருண் மெய்ப் பொருள் காண்பதறிவு' என்னும் திருக்குறளை அறிந்திருந்தும் தக்க சமயத்தில் நினைத்துப் பார்க்கத் தவறிப்போன குப்பன்தான்!

நல்ல யுக்தி!



அதிசயத் திருடன்

கடலூர் ராஜன்

அன்றுதான் மாணவர்களுக்குத் தேர்வு முடிந்தது. ஆதலின் மாணவர் விடுதியில் தங்கி இருந்தோர் சிலர் ஊருக்குக் கிளம்பினர். சிலர் சினிமாவுக்குச் சென்றனர்: எப்பொழுதும் இரவில் அமர்க்களப்பட்டுக்கொண்டிருக்கும் மாணவர் விடுதி அன்று அமைதியுற்றிருப்பதற்குத் தேர்வு முடிந்ததே காரணம்.

மணி பத்து என அறிவித்தது மாணவர் விடுதியில் இருந்த மணிப்பொறி. மணி ஒன்பதாகிவிட்டால் மாணவர் விடுதியைச் சுற்றியுள்ள விளக்குகளை அணைத்துவிடுவார்கள். ஆதலின், அப்பொழுது மாணவர் விடுதியைச் சுற்றி இருள் சூழ்ந்திருந்தது. இந்த நேரத்தில்தான் மாதவனும், ராஜனும் இரண்டாவது அறையைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தனர்; மின்சார விளக்கைப் போட்டான் மாதவன். உடனே, மின்சாரம் தாக்குண்டவன்போல் நின்றான்!

''ராஜன், என் பெட்டி திருட்டுப் போய்விட்டது'' என்று கூவினான் மாதவன்.

''என்ன! திருட்டுப் போய்விட்டதா?'' என்றான் ராஜன். மாதவன் பதில் பேசவில்லை.

''மாதவா, கவலைப்படாதே. இந்த ஒரே இரவில் திருடனைக் கண்டுபிடித்து விடுகிறேன்.''

ஆனால் ராஜனுடைய வாய்தான் இப்படிச் சொன்னதே ஒழிய, திருடனைக் கண்டுபிடிக்க முடியுமா என்பது அவனுக்குச் சந்தேகமாகத்தான் இருந்தது.

''மாதவா, சினிமாவுக்குக் கிளம்பும்பொழுது ஜன்னல் கதவை சாத்திவிட்டுதானே வந்தாய்? அந்தப் பெட்டியில் என்ன, என்ன இருந்தன?''

''ஜன்னல்கதவைச் சாத்தினதாக எனக்கு ஞாபகம் இல்லை: திறந்து வைத்துவிட்டுதான் வந்திருக்கிறேன். வைர மோதிரம், தங்கச் செயின் போட்ட கடிகாரம், இருநூறு ரூபாய், என் உடைகள் - இவைதான் என் பெட்டியில் இருந்தவை.''

''சரி, உனக்கு யார் மேலாவது சந்தேகம் உண்டா?''

''எனக்கு யார் மேலும் சந்தேகம் கிடையாது. ஆனால், இரண்டு நாளுக்குமுன் எனக்கும் பாலனுக்கும் ஒரு விவாதம் நடந்தது. அதற்கும் இத்திருட்டுக்கும் சம்பந்தம் இருக்கலாம் என நினைக்க இடம் இருக்கிறது. எனக்கு எப்பொழுதும் எதிலும் கவனக்குறைவு அதிகம். அறையைத் திறந்து வைத்துவிடுவேன். இதைப் போல் அடிக்கடி நடந்திருக்கிறது. அன்று அப்படித்தான் கதவைத் திறந்து வைத்துவிட்டு வெளியில் சென்றுவிட்டேன். அடுத்த அறையில் இருந்த பாலன் இதைக் கவனித்திருக்கிறான். 'என்ன மாதவா, கதவைத் திறந்து போட்டுவிட்டுப் போகிறாயே! ஏதாவது திருட்டுப் போய்விட்டால் என்ன செய்வாய்?' என்று, நான் திரும்பி வந்ததும் என்னிடம் கேட்டான் அவன். 'உம், எந்தப் பயலுக்கு அவ்வளவு துணிச்சல்?' என்று சுடசுடப் பதில் கொடுத்தேன். 'நான் ஊருக்குப் போவதற்குள் ஒரு நாள் உன்னை அழ வைக்காவிடில் என் பெயரை மாற்றி வச்சுடு' என்று சவால் விட்டான் அவன். அன்று விளையாட்டாகச் சொன்னவன் உண்மையாகவே செய்துவிடுவான் என்று நான் நினைக்கவே இல்லை.''

''அவ்வளவுதானே உனக்கும் பாலனுக்கும் நடந்த பேச்சுக்கள். வேறு ஏதேனும் உண்டா? உனக்

கும், பாலனுக்கும் இந்த விவாதம் எத்தனை மணிக்கு நடந்தது?''

எனக்குச் சந்தேகமான பேர்வழி வேறு யாரும் கிடையாது. விடுதி மணிப்பொறி ஒன்பது அடிக்கும்பொழுது இந்தப் பேச்சுக்கள் நடந்தன.''

''அப்போது, பாலன்தான், உன்னை ஏமாற்றுவதற்காக உன் பெட்டியை எடுத்துக்கொண்டு போயிருக்கலாம். வா, அவனைப் போய் கேட்கலாம்.''

ராஜன் உடனே, அறை முழுவதும் தன் கண்ணோட்டத்தைச் செலுத்தினான். யாராவது அறையினுள் வந்து சென்றதற்கு வேண்டிய துப்புக் கிடைக்கிறதா என்றுதான் பார்த்தான். ஒன்றும் கிடைக்கவில்லை.

உடனே ராஜனும் மாதவனும் பாலன் அறைக்குச் சென்றுப் பார்த்தார்கள். அது பூட்டியிருப்பதைப் பார்த்ததும் பாலன் எங்கே சென்றிருப்பான் என்ற சந்தேகத்தில் ஆழ்ந்தனர்.

அப்பொழுதுதான், சம்பத்தும் கண்ணனும் சினிமாவுக்குச் சென்று, காட்சி ஆரம்பித்துவிட்டதைக் கண்டு, ஏமாற்றத்துடன் திரும்பி வந்து அறைக் கதவைத் திறந்தனர்.

''ஏம்பா சம்பத், பாலன் எங்கே போனான் என்று உங்களுக்குத் தெரியுமா?'' என்று அவர்களிடம் கேட்டான் ராஜன்.

''பாலன்தான் மாலையே ஊருக்குப் போய்விட்டானே! ஏன், என்ன விஷயம்?'' என்றான் சம்பத்.

''மாதவனுடைய பெட்டி தொலைந்துவிட்டது. அதை அவன் எடுத்திருப்பானோ என்று கேட்பதற்குத்தான்'' என்றான் ராஜன்.

''நான் அப்பொழுதே நினைத்தேன்; திருடன்தான் வந்திருக்கிறான் என்று. நான் சந்தேகப்பட்டது இப்பொழுது சரியாகப் போய்விட்டது'' என்றான் சம்பத்.

''என்னப்பா, புதிர் போடுகிறாய்! திருடன் வந்தது உனக்குத் தெரியுமா? என்ன நடந்தது?'' என்றான் ராஜன்.

சம்பத் விளக்கிச் சொல்ல ஆரம்பித்தான்:

அப்பொழுது மணி ஒன்பதரை. எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. அப்பொழுது, நானும் கண்ணனும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். சிறி[illegible] அடித்தது. [illegible] சாத்தி விடலாம் என்று கதவைச் சாத்தப் போனேன். தற்செயலாக வெளியில் எட்டிப் பார்த்தேன்.

என்ன ஆச்சரியம்! ஒரு கரிய உருவம், பாலன் அறைக்கு நேராகப் போவது போன்று என் கண்ணுக்குத் தெரிந்தது.

''திருடன்! திருடன்! டேய், கண்ணு, டார்ச்சு லைட்டை எடுடா'' என்று கத்தினேன்.

கண்ணன் 'டார்ச்சு லைட்' எங்கிருக்கிறது என்று தேடிக்கொண்டிருந்தான். உடனே, நான் தேடி எடுத்து அந்தப் பக்கம் விளக்கைப் போட்டுப் பார்த்தேன். அங்கே, அப்பொழுது பாலன் அறைக்கு நேராக ஒட்டிலிருந்து ஒரு கறுப்புத் துண்டுமட்டும்தான் தொங்கிக் கொண்டிருந்தது. வேறு மனிதர்களையே காணோம்.

''நல்ல ஆளப்பா. துணியைக் கண்டு திருடன் என்று கத்திட்டியே. யாரும் ஓடி வராமல் இருந்ததே நல்லது. பாலன், ஒட்டில் காய வைத்த துணியை அவசரத்தில் எடுத்துப் போக மறந்துவிட்டான் போலிருக்கிறது'' என்றான் கண்ணன்.

கண்ணன் சொன்னதைக் கேட்டு, திருடன் இல்லை என்று உணர்ந்தேன். ஆனால் இப்பொழுதுதான் தெரிகிறது அவன் திருடன்தான் என்று.

உடனே, ராஜன் அந்தக் கறுப்புத் துண்டை வாங்கிப் பார்த்தான். அதில் 'பாலன்' என்று ஒரு மூலையில் எழுதியிருந்தது.

இப்பொழுது ராஜனின் மனம் குழம்பியது. எதற்கும் பாலனது அறையைச் சோதனை செய்ய எண்ணினான். மாதவனுடைய பெட்டியை அவன்தான் திருடினான் என்பதற்குத் துப்புக் கிடைக்கிறதா, பார்ப்போம் என்று ராஜனுக்குத் தோன்றியது. உடனே, வார்டனிடம் சென்று பாலன் இருந்த அறையின் சாவியை வாங்கி வந்து திறந்தான். விளக்கைப் போட்டான்.

என்ன ஆச்சரியம்! மாதவனுடைய பெட்டி அங்கே திறந்து கிடந்தது. ஆனால் அதில் இருந்த விலை உயர்ந்த சாமான்களைக் காணேம். மாதவனுடைய பெட்டியில் இருந்த உடைகள் எல்லாம் சிதறிக் கிடந்தன.

''மாதவா, இந்த உடைகள் எல்லாம் சரியாக இருக்கா என்று பார்த்துக்கொண்டு எல்லாவற்றையும் பெட்டியில் எடுத்து வைத்துக் கொள்'' என்றுன் ராஜன்.

''பாலன் இவ்வளவு பெரிய திருடனய் இருப்பான் என்று நான் நினைக்கவே இல்லை. அவன், ஊருக்குச் செல்கிறேன் என்று நம்மிடம் சொல்லிவிட்டு, திரும்ப வந்து எவ்வளவு சுலபமாகத் திருடிக்கொண்டு போய் இருக்கிறுன், பார்த்தாயா?'' என்றுன் கண்ணன்.

''விளக்கைப் போட்டுக்கிட்டு எல்லோரும் என்ன செய்றீங்க?'' என்று கேள்வி கேட்டபடி திடீரென்று உள்ளே நுழைந்தான் வேலைக்கார வேலாயுதம்.

''மாதவனுடைய பெட்டி திருட்டுப் போய்விட்டது. திருடன் யார் என்று ஆராய்கிறேம்'' என்றுன் சம்பத்.

''என்ன? திருட்டுப் போய் விட்டதா? அட, பாலன் தோளில் போட்டிருந்த கறுப்புத் துண்டு இங்கே எப்படி வந்தது?'' என்று கீழே கிடந்த கறுப்புத் துண்டைப் பார்த்து ஆச்சரியத்துடன் கேட்டான் வேலாயுதம்.

''வேலாயுதம்! நீ பாலன் தோளில் போட்டிருந்த கறுப்புத் துண்டை எப்பொழுது பார்த்தே? எங்கே பார்த்தே? இந்தக் கறுப்புத் துண்டுதான, அவன் போட்டிருந்தது?'' என்று கேள்விகளை அடுக்கினன் ராஜன்!

''மணி ஒன்பது இருக்கும். வெளியில் சென்று வெற்றிலை வாங்கி வரலாம் என்று போனேன். அப்பொழுது வழியில் பாலனைச் சந்தித்தேன். 'நீ ஊருக்குப் போகவில்லையா?' என்று கேட்டேன். 'இல்லை. இப்பொழுது விடுதிக்கு மாதவனைப் பார்க்கப் போகிறேன்' என்று சொல்லிவிட்டுச் சென்றுன். அப்பொழுதுதான் பார்த்தேன், இதே கிழிந்த கறுப்புத் துண்டு தோளில் போட்டிருந்தானே பாலன்! இவ்வளவு நேரம் சிநேகிதர்களுடன் அரட்டை அடித்து விட்டு இப்பொழுதுதான் வருகிறேன். இங்கே விளக்கு எரியவே என்ன என்று கேட்க வந்தேன்'' என்று சொல்லி முடித்தான் வேலாயுதம்.

அவன் சொன்னவைகளைக் காதில் வாங்கிக்கொண்டு அறையைச் சுற்றி ஆராய்ந்தான் ராஜன். அப்பொழுது, ஒரு கைக்குட்டையும், ஓர் ஆணியும் ஜன்னலுக்கு அருகில் கிடந்தன. உடனே அவற்றை எடுத்துக் கொண்டான். பிறகு எல்லோரும் வெளியில் வந்து பாலனது அறையைப் பூட்டிவிட்டார்கள்.

ராஜன், அந்த வெள்ளைக் கைக்குட்டையை ஆராய்ந்தான். அதில் மஞ்சள் நிறமான விரல்கள் தெளிவாகப் படிந்திருந்தன. மற்றும் ஓர் ஓரத்தில் ரத்தக் கறை பட்டிருந்தது. மற்ருேர் ஓரத்தில் 'பாலன்' என்று பெயர் எழுதியிருந்தது.

''டேய், கண்ணு! போலீசை வரச் சொல்லி உடனே போன் பண்ணு'' என்றுன் ராஜன். கண்ணன் போன் பண்ண ஓடினன். அப்பொழுதுதான் பாலனும் அங்கே வந்தான்.

''என்னப்பா, பாலா! ஊருக்குப் போக வில்லையா?'' என்றனர் எல்லோரும் ஒரே சமயத்தில்.

''இல்லை ரெயில் தவறிவிட்டது. சாமான்களை ஓரிடத்தில் வைத்திருக்கிறேன். நாளைக்குத்தான் போகிறேன். மாதவனை ஒன்பது மணிக்கு இங்கே பார்க்க வந்தேன். வழியில் வேலாயுதத்தைப் பார்த்து என் கறுப்புத் துண்டைக் கொடுத்தேன் அவன் அறை பூட்டி இருக்கவே, சினிமாவுக்குச் சென்றிருப்பான் என்று நினைத்துக்கொண்டு திரும்பிப் போய்விட்டேன். இரண்டாவது ஆட்டத்திற்குப் போய் இப்பொழுதுதான் திரும்ப வருகிறேன். இப்பொழுது, இங்கே படுத்திருந்துவிட்டுக் காலையில் போகலாம் என்று வந்தேன்'' என்றுன் பாலன்.

சிறிது நேரத்தில் சப்-இன்ஸ்பெக்டர் உள்ளே நுழைந்தார்.

"சார், வேலாயுதத்தைக் கைது செய்யுங்கள். அவன்தான் குற்றவாளி" என்றான் ராஜன். எல்லோரும் பாலன்தான் குற்றவாளி என்று நினைத்துக்கொண்டிருக்கும்போது, வேலாயுதம் குற்றவாளி என்றால் ஆச்சரியம் ஏற்படாதா, என்ன? உடனே ராஜன், தான் வேலாயும்தான் குற்றவாளி எனக் கண்டுப் பிடித்த விதத்தைக் கூற ஆரம்பித்தான்:

இரண்டு நாளுக்கு முன், காலை ஒன்பது மணிக்குப் பாலனும் மாதவனும் பேசிக்கொண்டிருந்தனர். வேலாயுதம் வழக்கமாக ஒன்பது மணிக்குச் செடிக்கு நீர் ஊற்றிக்கொண்டிருப்பான். அப்பொழுதுதான் அவர்கள் பேசியதை அவன் கேட்டிருக்கிறான்.

இன்று இரவு ஒன்பது மணிக்கு வேலாயுதம் வெற்றிலை வாங்க வெளியில் சென்றிருக்கிறான். அப்பொழுது பாலனைச் சந்தித்திருக்கிறான். அவன் ஊருக்குச் செல்வதை அறிந்த வேலாயுதம் தனக்கு ஏதாவது கொடுக்கும்படி கேட்டிருக்கிறான். இதுபோல் எல்லோரிடமும் கேட்பது அவன் வழக்கம். உடனே, பாலன் தன் மேல் போட்டிருந்த கறுப்புத் துண்டையும், கைக்குட்டையையும் அவனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருக்

கிருன். பிறகு விடுதிக்கு வந்து மாதவனைப் பார்த்திருக்கிருன் பாலன். மாதவன் அறை பூட்டி இருக்கவே உடனே திரும்பிச் சென்றுவிட்டான்.

வேலாயுதம் வெற்றிலையை வாங்கிக்கொண்டு உடனே விடுதிக்குத் திரும்பி விட்டான். விடுதியைச் சுற்றி வந்திருக்கிருன். அப்பொழுது மாதவனுடைய அறையின் ஜன்னல் கதவு திறந்து கிடந்ததைப் பார்த்திருக்கிருன். ஜன்னலுக்குக் கம்பியும் இல்லை. பிறகுதான், ஜன்னல் வழியாக உள்ளே குதித்துப் பெட்டியை எடுத்துப் போய் இருக்கிருன். தற்செயலாகச் சம்பத் இதைப் பார்த்திருக்கிருன். உடனே, வேலாயுதம் சம்பத்தை ஏமாற்றுவதற்காக, பாலன் கொடுத்த கறுப்புத் துண்டை ஒட்டிலிருந்து தொங்கும்படி செய்து விட்டு, பாலனது அறையில் புகுந்து கொண்டான். பாலன் அறையைக் காலி செய்யும்பொழுது, கம்பி இல்லாத ஜன்னல் கதவை திறந்து வைத்துவிட்டது வேலாயுதம் தப்பிப்பதற்குச் சாதகமாய் முடிந்தது. அதனுல் 'வெறும் துணியைக் கண்டு ஏமாந்தோம்; திருடன் இல்லை' என்று கண்ணனும் சம்பத்தும் தீர்மானித்தனர்.

பிறகுதான் பாலன்மேல் இக் குற்றத்தைப் போட்டுவிடுவதுஎனத் தீர்மானித்தான் வேலாயுதம். சுவரில் இருந்த ஆணியைப் பிடுங்கி,பெட்டியைத் திறந்திருக்கிருன். ஆணி அவன் கையைப் பதம் பார்த்துவிட்டது. ரத்தமும் வந்திருக்கிறது. பாலன் கொடுத்த கைக்குட்டையை எடுத்து ரத்தத்தைத் துடைத்திருக்கிருன். அப்பொழுது அவன் கையில் மஞ்சள் சுண்ணும்பு இருந்திருக்கிறது. அந்த அறைக்கு அப்பொழுதுதான் புதியதாய் மஞ்சள் சுண்ணும்பு பூசப்பட்டிருக்கிறது. வேலாயுதம் சுவரில் கைவைத்த பொழுது ஒட்டிக்கொண் டிருக்கிறது. கைக்குட்டையில் ரத்தத்தைத் துடைக்கும்பொழுது, விரல்களில் ஒட்டி இருந்த மஞ்சள் சுண்ணும்பு கைக்குட்டையில் தெளிவாகப் படிந்து இருக்கிறது. பிறகு, அந்தக் கைகுட்டையை அங்கேயே போட்டுவிட்டுப் போய் இருக்கிருன் வேலாயுதம்.

பாலன் மேல் சந்தேகப்படும்படி இந்தத் திருட்டை நடத்தி இருக்கிருன் வேலாயுதம். அதனுல்தான், ஆணியினுல் பெட்டியைத் திறந்து விலை உயர்ந்த பொருள்களை மட்டும் எடுத்துக்கொண்டு, மற்றவைகளைப் பாலன் அறையிலேயே போட்டுவிட்டுப் போய் இருக்கிருன். பாலன்தான் திருடன் என்று எல்லோரும் நினைத்துக் கொள்ளட்டும் என்றுதான் இப்படிச் செய்திருக்கிருன்.

எல்லாத் துப்புகளும் பாலன்தான் குற்றவாளி என்று கூறுகிறது. அப்படி இருக்க, ஏன் பாலன் குற்றவாளியாக இருக்கக்கூடாது என்று நீங்கள் நினைக்கலாம். ஆனுல், கைக்குட்டையில் படிந்திருக்கும் விரல்கள் மட்டும் பாலன் குற்றவாளி எனத் துப்புக் கூறவில்லை. எப்படி, என்று நினைக்கிறீர்களா?

பாலனது வலது கையில் ஐந்து விரல்கள் இருக்கின்றன. ஆனுல் வேலாயுதத்து வலது கையில் ஆறு விரல்கள் இருக்கின்றன. கைக்குட்டையில் படிந்திருக்கும் விரல்களோ, வலது கை விரல்கள் ஆறு எனத் தெளிவாகக் கூறுகின்றது. இதனுல் வேலாயுதம்தான் குற்றவாளி எனக் கண்டு பிடித்தேன். மற்றும் அவனது ஆருவது விரலைப் பாருங்கள்; சுண்ணும்பு தடவி இருக்கிருன். ஆணி குத்திக் காயம் ஏற்பட்டதனுல்தான் சுண்ணும்பு தடவி இருக்கிருன். அவனது உடலை உற்றுப் பாருங்கள். சில இடங்களில் மஞ்சள் சுண்ணும்பு கூட ஒட்டிக்கொண் டிருப்பதைக் காணலாம். இக் காரணங்களினுல் தான் வேலாயுதம் குற்றவாளி எனக் கண்டு பிடித்தேன்.

இதைக் கேட்டதும் இன்ஸ்பெக்டர் முதல் எல்லோருமே ஆச்சரியத்தில் ஆழ்ந்தார்கள். ஒரே இரவில் இவ்வளவும் நடந்துவிட்டதே! பிறகு வேலாயுதத்தைச் சுமந்து கொண்டு 'ஜீப்' பறந்தது. மற்றவைகளையும் நான் விளக்க வேண்டுமா, என்ன? நீங்களேதான் கற்பனை செய்துப் பாருங்களேன்.

பாலர் கவி அரங்கம்

நிலவே-வா

நிலவே நிலவே ஓடிவா
நீயே வெண்ணெய் ஏந்திவா
மலர்க்கை கண்ணன் கையினிலே
மகிழ்வாய் தரவே ஆடிவா!
வா வா நிலவே ஓடிவா
வானிலிருந்து மிதந்துவா
அலைபொங்கும் கடலே பாடவா
ஆசையின் அமுதே ஆடவா
கலைமகள் தங்கும் வெண்தாமரையே
கண்ணன் மாலையாக வா
வா வா நிலவே ஓடிவா
வானிலிருந்து மிதந்துவா.

—வி. சரஸ்வதி, சென்னை - 4.

இயற்கைக் காட்சி

அந்தி மயங்கும் நேரத்திலே—ஓர்
ஆற்றங் கரையினில் வீற்றிருந்தேன்
சுந்தர மானதன் பொன்னிறத்தால்—என்
சிந்தை கவர்ந்தன நெற்பயிர்கள்!
மேற்றிசை யின்அடி வானத்திலே—சுடர்
மேவிடும் ஆதவன் வீழநின்றான்
மாற்று நிறைந்தபொன் னாடையினை—அங்கு
மண்ணில் விரித்ததைக் காணலுற்றேன்!
காற்றில் மிதந்து வரும்கானம்—இரு
காதுகள் தம்மை அடிமைகொள்ள
ஆற்றில் விரைந்திடும் பொற்புனலோ—எனில்
ஆசைக் கரங்களை நீட்டியதே!
வியப்பிற் குரிய முறையினிலே—பல
செயற்கைப் பொருள்களைச் செய்திடினும்
இயற்கை தன்னில் பெருமின்பம்—பெறல்
முயற்கொம் பன்றோ செயற்கையிலே?

—குகநேசன், துறையூர்.

கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

M. R. பொன்னுசாமி, மங்கலம்.

உலகத்தில் எந்த மொழி அதிகம் பேசப்படுகிறது?

ஆங்கிலம்.

சைக்கிளை முதன் முதலில் எந்த நாட்டினர் கண்டு பிடித்தனர்?

இதன் முழுப் பெயர் பைசைக்கிள் (Bicycle) என்பது. 'முன் ஒன்றும், பின் ஒன்றுமாக ஒரே ஒழுங்கில் இரண்டு சக்கரங்களை உடைய வண்டி' என்பது இதற்குக் கூறப்பட்ட இலக்கணம்.

ஒரு சக்கரம் வேகமாகச் சுழலும் போது அது சாய்ந்து விழுவதில்லை என்பது இதன் தத்துவம்.

இந்த இலக்கணமும் தத்துவமும் பொருந்தும்படியான வண்டி ஒன்றை முதன் முதலில் கண்டு பிடித்தவர் ரைன் நதிக் கரையிலுள்ள மான் ஹைம் (Manheim—on—the—Rhine) நகரத்தைச் சேர்ந்தவர். அவருடைய பெயர் பாரன் வான் டிரேய்ஸ் (Baron von Drais). இதை அவர் சுமார் 1779-ஆம் வருஷ வாக்கில் கண்டு பிடித்தார் என்று தெரிகிறது.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்களான பிளான்ஷார்டு (Blanchard), மாகுரியேர் (Magurier) என்பவர்களால் இப்படிப்பட்ட ஒரு சைக்கிள் அமைக்கப் பட்டது. அதைக் கண்டு பிடித்த டிரேய்ஸ் என்பவரின் பெயரைக் கொண்டு அதற்கு டிரேய்ஸீன் (Draisine) என்னும் பெயர் இடப்பட்டது.

அந்தச் சைக்கிளுக்குப் பெடல் (Pedal) கிடையாது. செயின் (Chain) கிடையாது. சைக்கிளின் மேல் உட்கார்ந்துகொண்டு, காலைத் தரையில் ஊன்றி உதைத்து உதைத்துச் சைக்கிளை ஓடச் செய்யவேண்டும்;

இந்தியாவில் உள்ள ஆறுகளில் மிகப் பெரியது எது?

இந்தியாவின் முந்நதிகள் ஸிந்து, கங்கை, பிரம்மபுத்திரா ஆகிய மூன்றும் எது பெரியது என்று போட்டியிட்டன.

இந்தியாவுக்குப் பெயர் கொடுத்ததான ஸிந்து நதி இப்பொழுது இந்தியாவை விட்டு விலகிவிட்டது. அதைப் பாகிஸ்தானத்தின் நதி என்றே கூற வேண்டும்.

பிரம்மபுத்திராவின் ஒரு பகுதி திபேத்திலும், கிழக்குப் பாகிஸ்தானத்திலும் இருப்பதால், அதையும் ஒதுக்கி விடலாம்.

தக்காணத்திலுள்ள நதிகள் கங்கையோடு ஒப்பிடும்படி அவ்வளவு பெரிய நதிகள் அல்ல. கங்கையே இந்தியாவிலுள்ள ஆறுகளில் மிகப் பெரிது. அதன் நீளம் சுமார் ஆயிரத்து ஐந்நூறு மைல் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த நீளத்தில் ஒரு பகுதி இப்போது கிழக்குப் பாகிஸ்தானத்தில் இருக்கிறது. கோதாவரியின் நீளம் சுமார் எண்ணூறு மைல்.

எஸ். ஏ. மனோகர், ஈரோடு.

ஐன்ஸ்டைன் என்பவர் யார்? அவரைப் பற்றிக் குறிப்புக்கள் தரவேண்டுகிறேன்.

ஐன்ஸ்டைன் (Einstein) என்பவர் ஜெர்மனி நாட்டில் பிறந்தவர். ஜாதியில் அவர் ஒரு யூதர், (Jew). யூத ஜாதியினர்கள் எல்லா நாடுகளிலும் காணப்படுகிறார்கள், அவர்கள் ஒரே மொழியைப் பேசுவதில்லை. எந்த நாட்டில் அவர்கள் வாழ்கிறார்களோ அந்த நாட்டின் மொழியே அவர்களுடைய மொழி; அந்த நாட்டு உடையே அவர்களுடைய உடை; அந்த நாட்டுப் பழக்க வழக்கங்களே அவர்களுடைய பழக்க வழக்கங்களும்,

இந்தக் காலத்தில் வாழும் கணித பௌதிக நிபுணர்களில் (Mathematical - Physicists) ஐன்ஸ்டைன் அநேகமாக ஈடு இணையற்று விளங்கினார் என்று சொல்லலாம். அவருக்குக் கணிதத்தில் இருந்த அற்புதமான தேர்ச்சியைத் துணை கொண்டு, பௌதிகத் துறையில் மனத்தைப் பிரமிக்கச் செய்யும் விஷயங்களைப் பற்றி முன் கூட்டியே ஜோஸ்யம் கூறினார். அவர் முதலில் அவ்விஷயங்களை எடுத்துக் கூறிய போது, அவர் சொல்லியதை விஞ்ஞானிகளில் ஒருவரும் நம்பவில்லை. ஆனால் பிற்காலத்தில் அவர் சொல்லிய விஷயங்களெல்லாம் உண்மை என்று தெரியவந்தது.

அவர் கூறிய ஜோஸ்யங்களிலெல்லாம் இக்காலத்தில் மிக மிகப் பெரிதாகத் தோன்றுவது அணுக் குண்டை (Atomic Bomb) ஒரு காலத்தில் இயற்றக் கூடும் என்று சொல்லியதே யாகும்.

பற்பல காரணங்களால் அவர் தம்முடைய பிறந்த நாடாகிய ஜெர்மனியை விட்டு வெளியேற வேண்டி யிருந்தது. பின்பு சுதந்தர நாடாகிய அமெரிக்காவிற்குச் சென்று பிரின்ஸ்டன் (Pirinceton) என்னும் சர்வகலாசாலையிலே பேராசிரியராக இருந்துவருகிறார். பிரின்ஸ்டன் என்பது அமெரிக்காவின் ஐக்கிய மாகாணங்களில் (United States) கிழ்க்கரை ஓரத்து அதாவது அட்லாண்டிக் மகா சமுத்திரத்துக் கரையோரத்திலுள்ள நாடுகளில் ஒன்றாகிய நியூ ஜெர்ஸி (New Jersey) என்னும் மாகாணத்தில் உள்ளது. இம் மாகாணம் நியூயார்க் (New York) மாகாணத்தை அடுத்துள்ளது.

எம். நடராஜன், சென்னை-20.

முதன் முதலில் ஆஸ்திரேலியாவைக் கண்டு பிடித்தவர் யார்?

ஐரோப்பியர்கள் ஆஸ்திரேலியாவைக் கண்டுபிடித்து நான்கு நூற்றாண்டுகளுக்குச் சற்றே அதிகமாகிறது. ஆயினும் அது பூமியிலுள்ள பழமை மிக்க நாடுகளில் ஒன்று.

1522-ஆம் வருஷத்தில் சில போர்த்துகீசிய மாலுமிகள்தான் அதை முதன் முதலாகக் கண்டார்கள். அவர்கள் கப்பலில் பிரயாணம் செய்யும்போது ஆஸ்திரேலியாவின் மேற்குப் பாகம் தென்பட்டது. அது பாறை மிகுந்ததாயும், இறங்குவதற்கு வசதி அதிகம் இல்லாததாயும் தோன்றியதால், அவர்கள் அங்கே கால் வைக்கவில்லை. அவர்கள் அதைப் பெரிய ஜாவா என்றார்கள்.

பின்பு டச்சுக்காரர்கள் அங்கே போனபோது அவர்களுக்கும் அது பிடிக்கவில்லை. ஆனால் அவர்கள் தென்பக்கமாகச் சென்று, அந்தத் தீவில் ஓரிடத்தில் இறங்கி, தங்கள் கொடியைப் பறக்கவிட்டார்கள். அவர்கள் அதற்கு நியூஹாலந்து (புதிய உலாந்து) என்று பெயர் இட்டார்கள்,

ஆனால் அதற்கு ஆஸ்திரேலியா என்று பெயரிட்டவர்கள் பண்டைப் பழங்காலத்தில் வாழ்ந்த மக்கள். தாங்கள் கண்ணால் கண்டறியாத பெருங்கண்டம் ஒன்று தெற்கு திசையில் இருக்கிறது என்று அவர்கள் நம்பி வந்தார்கள். அந்தக் கற்பனை நாட்டுக்கு அவர்கள் தென் நிலம் என்று பொருள் உள்ள டெர்ரா ஆஸ்டிரேலிஸ் என்ற பெயரை இட்டார்கள். அந்தப் பெயரே டச்சுக்காரர்கள் இறங்கிய தீவுக்கு நிலைத்துவிட்டது.

அர. உ. ப., சிதம்பரம்.

கடல் நடுவில் ஏன் நிச்சப்தமாக இருக்கிறது?

சத்தத்துக்கு, அதாவது ஒலிக்குக் காரணம் அதிர்வு (Vibration). ஒரு பொருள் மிகவும் விரைவாக அதிர்ந்தால் அது அதன் அயலில் உள்ள காற்றின்மீது மோதுகிறது. அதனால் ஓசை உண்டாகிறது. அதிர்வு இல்லையானால் ஓசையும் இல்லை.

கடலின் நடுவில், காற்று இல்லாத வேளையில், ஒரு பொருளும் அசைவதில்லை. நீரில் அலைகள் உண்டாவதில்லை. அலைகள் உண்டாகுமானால், நீரின்மேலும் காற்றின் மேலும் நீர் மோதி, ஓசை உண்டாகும்.

ஆனால், நடுக் கடலில் சில வேளைகளில் புயல்கள் தோன்றுவதுண்டு. அப்போது அலைகளும் பேரிரைச்சலும் உண்டாகும்.

சி. பத்மநாபன், சைதாப்பேட்டை.

வானத்திற்கு அப்பால் என்ன இருக்கிறது?

முதலாவது, வானம் என்றால் என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டும். நமக்கு நீல நிறமாய்த் தலைக்கு உயரவும் நாற்புறமும் தோன்றும் ஒன்றையே நாம் வானம் என்கிறோம். உண்மையில் அது ஒன்றும் இல்லாத வெற்றிடம் என்று பொதுப்படச் சொல்லலாம். அதை வான வெளி என்றும் சொல்கிறோம் அல்லவா?

முன்னொரு காலத்தில், நீல நிறமாகத் தோன்றும் ஒரு வகைப் படிகத்தால் அமைந்த விதானம் என்றும், நக்ஷத்திரங்கள் முதலியவை அதில் பதிக்கப்பட்டிருக்கின்றன என்றும், கோள வடிவமான அந்தப் படிக விதானம் நம்முடைய பூமியைச் சுற்றிச் சுழன்று வருகிறது என்றும் எண்ணினார்கள். பிற்காலத்தில் அது வெறும் வெற்றிடம், அதில் வெவ்வேறான தூரங்களில் நக்ஷத்திரங்கள் முதலியவை சிதறிக் கிடக்கின்றன என்று தெரிந்து கொண்டார்கள்.

இன்னும் பிற்காலத்தில் இந்த வான வெளிக்கு எல்லையே கிடையாது; அது கண்ணுக்கெட்டாத் தூரத்தில், மனத்துக்கும் எட்டாத் தூரம்வரை விரிந்து கிடக்கிறது; இதுவே பிரபஞ்ச வெளி; கோடானு கோடிக் கணக்கான நக்ஷத்திரங்கள் நெபுலாக்கள் முதலியவை அதில் சிதறிக் கிடக்கின்றன; எங்கும் நிறைந்ததே பிரபஞ்ச வெளி என்று நம்பிவந்தார்கள்.

சிலகாலமாக, எட்டிங்டன், ஜீன்ஸ் முதலிய சிறந்த வான சாஸ்திரிகள் கணித முறையாகவும், தர்க்க முறையாகவும் ஆராய்ந்து, பிரபஞ்சம் என்பது முடிவுள்ளது என்று கூறிவருகிறார்கள். அந்த அபிப்பிராயமே இப்பொழுது ஒப்புக் கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த அபிப்பிராயத்தின்படி வானத்திற்கு அப்பால் ஒன்றும் இல்லை என்பதுதான் முடிவு. இந்த விடை எளிதாகத் தோன்றுகிறது; ஆனால் இதை மேன்மேலும் நினைக்க நினைக்க, இதிலுள்ள ஆழ்ந்த கருத்து, நம்முடைய மனத்தைப் பிரமிக்கச் செய்யும் கருத்து.

டி. லிங்கராஜன், காரமடை.

உலகத்திலே புகழ் பெற்ற புகை வண்டி நிலையம் எது?

புகழுக்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். ஆகையால் இந்தக் கேள்விக்கு நானகு விடைகள் கூறப் போகிறேன்.

நியூ யார்க் நகரத்தில் உள்ள கிரான்டு சென்டிரல் டெர்மினல் (Grand Central Terminal) என்னும் ரெயில் நிலையத்தில் சிலகாலத்துக்கு முன்னால் ஐம்பது பிளாட்பாரங்கள் இருந்தன. அவைகளைக்கொண்டு அது புகழ் பெற்றது.

சிக்காக்கோவில் உள்ள ரெயில் நிலயத்தில் நாள் தோறும் ஆயிரம் ரெயில்கள் ஓடிவந்தன. அவைகளின் எண்ணைக்கொண்டு அது புகழ் பெற்றது.

நம்முடைய நாட்டில் முன்னால் பெங்கால், வடமேற்கு ரெயில்வே பகுதியில் உள்ள சோன்பூர் என்னும் ஊரிலுள்ள புகைவண்டி நிலையத்திலுள்ள பிளாட்பாரம் இரண்டாயிரத்து நாநூற்றுப் பதினைந்து அடி அதாவது கிட்டத்தட்ட அரை மைல் நீளம் இந்த நிலயம் நீளத்தால் புகழ்பெற்றது.

கீனியா மாகாணத்தில் கீனியா உகாந்தா ரெயில் பாதை உன்னதமான மலைகளின் மீது அற்புதமாகப் போடப்பட்டது. அதில் சுமார் தொள்ளாயிரம் அடி உயரத்தில் டிம்பரோவா (Timbaroa) என்னும் புகைநிலயம் ஒன்று இருக்கிறது. இது உயரத்தால் புகழ் பெற்றது. இதைக் காட்டிலும் அதிக உயரத்தில் ஏதோ ஒரு புகைவண்டி நிலயம் இருப்பதாகப் படித்திருக்கிறேன். இப்போது நினைவுக்கு வரவில்லை. உங்களில் யாருக்காவது தெரிந்தால் சொல்லுங்கள். முன்கூட்டியே என் வந்தனத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

வாலிபனே! நீ நெருப்போடு விளையாடுகிறாய்! இளவரசி குணமடையா விட்டால்.....
ஆபத்தை அறிவேன் அரசே!
சரி, அழைத்துச் செல் இவனை!
வாலிபனே! அதோ பார்!
இளவரசியைக் குணப்படுத்த வந்த இளவரசர்களுடைய தலைகள்!
முட்டாள்கள்!
பாவம்! உன்னைப் பார்த்தால் பரிதாபமாய் இருக்கிறது. இப்பொழுது கூட நீ தப்பித்து விடலாம். என்னோடு வசிக்கலாம்.
பெண்ணே! உன் அன்புக்கு நன்றி. பூதாரைப் பார்க்காமல் நான் வரமாட்டேன்.

உம்! இங்கேயே இரு!
ஆள் எப்படி இருக்கிறன்? கூட யார் வந்திருக்கிறர்கள்?
ஆள் நல்ல அழகன். கூட யாரும் வரவல்லே.
அழகன்! யாராய் இருந்தாலும் சரிதான். வெளியே விரட்டு!
நான் போகிறேன். ஆனல் இந்தக் கடித உறையை அவளிடம் கொடுத்து விடு!
அவன் கொடுத்த உறை இது!
ஆ! அதே மோதிரம்!

(தொடரும்)



லீடர் மணி

'ஆர்வி'

குழாயிலிருந்து தண்ணீர் கொட்டும் ஓசை அதற்குப் பிறகு கேட்டது.

'சரிதான்; பொழுது விடிந்தாற் போல்தான்!' என்று மணியின் மனசு பக்பக்கென்று அடித்துக் கொள்ள வாரம்பித்தது. ஒவ்வொரு நிமிஷமும் அவனை நெருப்பில் வாட்டுவது போலத் தகித்தது.

''கா கா, கா கா!-''

காக்கைகள் கத்தின. கீச்சு மூச்சென்று பறவைகள் பாடத் தொடங்கின. கிழக்கு நன்றாக வெளுத்து விட்டது. ஆனால் அவன் அறைமட்டும் இருண்டே கிடந்தது. கிழவியின் ராமஜபம் கேட்டுக் கொண்டேயிருந்தது. மணி செய்வதறியாது குழம்பித் தவித்தான். அடுத்தடுத்து எங்கேயோ கதவுகள் திறக்கும் ஓசையும் வாளி அடிபடும் ஓசையும் பாத்திரங்க்ள் எடுபடும் போது எழும் ஓசையும் மாறி மாறிக் கேட்ட வண்ணமிருந்தன.

பொசுக்கென்று அவன் அறைக்கு எதிரே இருந்த விளக்கை யாரோ திடீரென்று போட்டார்கள். மணி கதவு ஓரமாக ஒடுங்கிக் கொண்டு நின்றான். வெளியில் இருந்த வெளிச்சம் அறையினுள்ளே பாதிவரையில் வந்து விழுந்தது. அப்போதுதான் அவன் காலடியில் கிடந்த வராட்டி அவனைப் பரிகாசம் செய்வதுபோல் அவன் கண்களில் பட்டது. அதிலிருந்து நீட்டிக் கொண்டிருந்த வைக்கோல் கூளம்தான் அவனைத் தேளாகவும் பூரானாகவும் சற்று நேரத்துக்கு முன் விரட்டியிருக்கிறது. மணிக்கு இதைக் கண்டு ஒரு புறம் கேலியாகவும் மறுபுறம் அவமானமாகவும் இருந்தது. ஆனால் அதற்குள் யாரோ வருகின்ற நிழல் தெரியவே அவன் அங்கிருந்த மூட்டை ஒன்றின் பின்னே பாய்ந்து தன்னை ஒளித்துக் கொண்டான். வெளியிலிருந்து வந்த ஓர் அம்மாள் கையில் ஒரு தகர டப்பாவுடன் அந்த அறைக்குள்ளே நுழைந்து கீழே கிடந்த கரித்தூளை அள்ளினாள். அது போதாமல் இருந்ததனால் தானோ என்னவோ மணி ஒளிந்து கொண்டிருந்த மூட்டையை முன்னால் சாய்த்து, இழுத்துப் பிரித்தாள்.

அடுத்த கணம், ''ஆ! திருடன், திருடன்!'' என்று மணி ஒளிந்து கொண்டிருப்பதைக் கண்டு அந்த வீடே அதிரும்படி கூவினாள். கூவினதோடு மட்டும் நின்றாலும் தேவலையே! அந்தக் கரி மூட்டையை அவன் மேலேயே பயத்தினால் உருட்டித் தள்ளிவிட்டாள். பாவம், விடிந்ததும் விடியாததுமாக மணிக்குக் கரிமூட்டை அபிஷேகம் ஆகிவிட்டது.

என்ன செய்கிறோம் என்பது புரியாமல் மணி தன்மீது விழுந்த மூட்டையை ஒரு தள்ளுத் தள்ளிவிட்டான். தடதடவென்று

எழுந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வெளியே எந்தக் கதவு திறந்திருக்கிறது என்று பார்த்துக் கொண்டே ஓடலானான். "விடாதே பிடி! திருடன்!" என்ற கூச்சல் பயங்கரமாகத் தொடர்ந்து வந்தது. மணி இரண்டே பாய்ச்சலில் வாசல் தெருவுக்கு வந்துவிட்டான்.

இருள் இன்னும் சரியாகப் பிரியவில்லை. ஆயினும் முன்னால் ஓடுகிற 'திருடன்' ஒரு சிறு பையன் என்பதை விரட்டிக் கொண்டு வந்தவர்கள் உடனே புரிந்துகொண்டு விட்டார்கள்.

திருடன் பெரிய ஆளாக இருந்தால் எல்லாருமே கொஞ்சம் அஞ்சுவார்கள். ஓடுகிறவன் இளைத்தவனாக இருந்தால் விரட்டுபவனுக்குக் குஷிதானே! அதனால் சிறுபையன் என்று தெரிந்ததும், "விடாதே! பிடி!" என்று கத்திக்கொண்டே ஓட்டமாய் ஓடி வந்தார்கள்

அதிகம் சொல்வானேன்! அவனை விரட்டிய நாலைந்தே பேர் வழிகள் நாற்பது ஐம்பது பேர்களாக வருவதுபோல ஆர்ப்பாட்டம் செய்தார்கள். மணி அகப்பட்டு போய்விட்டான். எதிரே ஒரு பால்

காரன் ஒரு பொம்மைக் கன்றுக் குட்டியைச் சுமந்துகொண்டு ஒரு பெரிய பசுவை ஓட்டி வந்தான். முன்னால் ஓடி வரும் பையனைப் பார்த்ததும் அவனுக்குக்கூடத் தைரியம் வந்துவிட்டது. பசுவை விடாமலே மணி ஓடிவருவதைக் குறுக்கே நின்று தடுத்தான். அடுத்த இரண்டே நிமிஷங்களில் மணியை எல்லாரும், அதாவது ஐந்தாறு பேர்வழிகள்தான், சுற்றி வளைத்துக் கொண்டு பிடித்துவிட்டார்கள். மணியைப் பார்த்திருந்தால் அப்போது நமக்குக்கூடச் சிரிப்பாகத்தான் இருந்திருக்கும். ஆமாம்; பரிதாபப்படுவதற்குப் பதில் முதலில் விழுந்து விழுந்து சிரித்திருப்போம். அல்லாப் பண்டிகைக்குச் சிலர் வேஷம் போட்டுக் கொண்டு காசு வாங்க வருவார்களே, அதைப் போலிருந்தான் மணி. இவனா மணி என்று நமக்கே அடையாளம் தெரிவது கஷ்டமாக இருந்திருக்கும்! மேலெல்லாம் கரி மூட்டை விழுந்ததனால் ஒரே கரி அபிஷேகம் செய்து கொண்டிருந்தான். உடம்பும் முகமும் ஒரே கரி.

அந்த ஐந்தாறு பேர்களில் ஒருவன் மணியின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். ''பயலே, இந்த வயசிலேயே இந்தத் திருட்டு வேலைக்குக் கிளம்பிட்டியா?'' என்று அதட்டினான். மற்றவர்களும் ஆளுக்கு ஒன்றாகப் பேசினார்கள். ஒருவன் அடிக்கக் கையை ஓங்கினான். கூட்டத்தையும் சத்தத்தையும் பார்த்துக் கேட்டுவிட்டு இன்னும் சிலர் தம் தம் வீடுகளிலிருந்து வந்தார்கள். மணி யாருடைய முகத்தையும் சரிவர கவனிக்கவில்லை. புறா நெஞ்சு படபடப்பதுபோல் அவன் இளநெஞ்சு அடித்துக் கொண்டது.

''விலகுங்க! உம்..வழிவிடுங்க!'' என்று கூட்டத்தை விலக்கும் ஒரு குரல்—மணிக்குப் பழக்கப்பட்ட

குரல்—வந்தது. மணி அந்த ஆசாமியைப் பார்த்தான். இரவு பிடித்துக் கொண்டு வந்த முரடன் ஸி. ஐ. டி. குப்புசாமிதான்!

மணிக்குப் பயம் முற்றிவிட்டது. இதற்குமேல் அவனுல் பயந்துபோக முடியாது. எவ்வளவு தூரம் அவனுக்குப் பயப்படத் தெரியுமோ அவ்வளவு பயந்து விட்டான். இப்போது துணிச்சல் தலைகாட்டத் தொடங்கியது. குருட்டுத் துணிச்சல்! மூங்கிலடி கிராமத்தில் எவ்வளவு துணிச்சல் இருக்குமோ, அதைவிடப் பன்மடங்குத் துணிச்சல் வரத் தொடங்கியது.

"இப்ப எல்லாரும் என்னை என்ன பண்ணணும் என்கிறீர்கள்? நானு திருடன்? நான் யார் வீட்டில் எதைத் திருடினேன்? என் கையை நன்ளுகப் பார்த்துக் கொள்ளுங்கள். பார்த்துக் கொண்டீர்களா? என் சட்டைப் பை, டிராயர் பை எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளுங்கள்! நான் எதையும திருடவில்லை, யார் வீட்டிலும் திருடவில்லை. என்னைப் பிடிப்பதற்குப் பதில் நீங்கள் எல்லாரும் இந்த முரட்டு ஆளைப் பிடித்துக் கொண்டீர்களானல், கெட்டிக்காரர்கள் தான். ஒரு பாவமும் அறியாத என்னை இந்த ஆள்தான் கொண்டு வந்து அந்த வீட்டில் போட்டு அடைத்தது!" என்று வெறி கொண்டவன்போல ஆத்திரத்துடன் பேசினுன். அவனுடைய கரி மூஞ்சியையும் சிவந்த கண்களையும் பார்த்தாலே வேடிக்கையாகத் தான் இருந்தது.

மணி பேசி முடித்ததும் ஒருவன் மட்டும் "ஹஹ்ஹா!" என்று பெரிதாகச் சிரித்தான்.

"தம்பீ! என்ன, பிரசங்கம் செய்யறே? இது நாடகமேடை இல்லை, அப்பனே! நீ யோக்கியன் என்பதை ஒப்புக்கொள்கிருேம். ஆனல் யோக்கியன் எதற்காக அப்பனே, உடம்பெல்லாம் கரியைப் பூசிக் கொண்டு நிற்கவேண்டும்? நீ என்ன கலிகால, நவீன யோக்கியனே?" என்றுன்.

"இல்லேடா ராஜா! இவுரு, ஸினிமா ஸெட்டிலேருந்து தப்பிச் சிக்கிட்டு வந்திட்டாருடா!" என்று இன்னெருவன் பரிகாசம் செய்தான்.

எல்லாரும் பரிகாசமாகச் சிரித்தார்கள்.

"சரி சரி; நிறுத்துங்க! விடுங்க அந்தப் பையனை இப்படி!" என்று அந்தக் குப்புசாமி மணியின் கையைப் பிடித்துக் கொண்டான்.

மணியின் கோபம் எல்லை கடந்தது. அவன் அபாரத் துணிச்சலுடனும் ஆத்திரத்துடனும் இரும்புப் பிடிபோல் பிடித்த குப்புசாமியின் கையை 'ஆவ்' என்று கடித்து விட்டான்.

"ஆ..ஆ!" என்று முரடன் கையை விட்டான். ஆனல் மணி அப்படியும் கடியை விடவில்லை. பற்கள் அழுந்த அழுந்த முரடனுடைய கூச்சலும் அதிகமாயிற்று. ஒருவரும் சட்டென்று அவர்களைப் பிரித்துத் தனித் தனியேவிட ஓடவில்லை. எல்லாரும் இதைப் பார்த்துக் கொண்டே நின்றூர்கள்.

குப்புசாமியோ வலி தாளாமல் மணியின் முகத்தைப் பிடித்து மற்ருெரு கையால் பிடித்துத் தள்ளினுன். அப்பொழுதும் மணியின் பற்கள் அதிகமாய் அழுந்தி இறுகியதே தவிர கை விடுபடுகிற வழியாய் இல்லை. இன்னும் பலாத்காரத்தை உபயோகப்படுத்தினல் பற்களோடு ஒரு குத்துச் சதை போய்விடும் போல இருந்தது.

"டிரிண்....டிரிண்...."

சைக்கிள் மணிச் சத்தம் திடீரென்று கேட்கவே எல்லாரும் திரும்பிப் பார்த்தார்கள். மணியும் பார்த்தான். பார்த்தானே இல்லையோ, பக்கென்று அவன் கடிப்பதை விட்டு விட்டு, "ஆ..சந்துரு!" என்று சைக்கிள் அருகே ஓடி வந்தான்.

ஆமாம்; சைக்கிளில் வந்தது சந்துருதான். ஆனல் சந்துருவுக்கு முதலில் சட்டென்று மணியை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. கரியைப் பூசிக்கொண்டு நிற்பவன் மணிதான் என்று அவன் தெரிந்து கொள்ளச் சிறிது நேரம் பிடித்தது. "மணியா? நீ எங்கே இங்கே வந்தே? இதென்ன வேஷம் உடம்பெல்லாம்?" என்றுன் சந்துரு. (தொடரும்)

எங்கள் பகுதி

* தமிழகம் புரிந்த தவப் பயன்

தமிழகம் புரிந்த
  தவப்பய னெனத்தகு
அமிழ்தினு மினிய
  அரும் பகுதிகளை
வேற்றுக் குழந்தைகள்
  போற்றுதல் கண்டும்
ஏற்ற முணர்ந்தில
  எம் கண்ணன்
என்னே இவன் நிலை!
  ஏத முடைத்தே!

ஜோரான வர்ண வேலைப்பாடுகளுடன் மிளிர்கிறது இவ்விதழ் (15-5-55) அட்டைப் படம்.

செவிக்குச் சுருக்கமாக அனுப்பப்படும் செய்திகள், அவரவர் அதிர்ஷ்டத்தை அளக்கும் அதிர்ஷ்ட எண்கள், குட்டிக் கவிஞர்களை ஊக்கப்படுத்தும் கவி அரங்கம், கேள்விகளுக்குக் கேலியே பதிலாக அல்லாமல், கருத்துக்கு விருந்தாய் அமையும் பதில்கள், சுலபமான முறையில் கற்றுக்கொடுக்கும் மின்சாரத்தால் இயங்கும் பொருட்கள், நேரம் போவது தெரியாமல் நீளும் நீண்ட தொடர் கதைகள், இவை யாவும் கண்ணனில் உள்ள தனி, நூதனமான அம்சங்கள்.

புதிய தொடர்கதையான 'குண்டுச் சீமா' நிரம்பவும் சுவையாயிருக்கிறது. 'லீடர் மணி' அருமையான கட்டத்தில் அகப்பட்டிருக்கிறான்.

'பகைவனுக்கு அருள்வாய்' சுமாரா யிருக்கிறது.

'பச்சைக் கல்' பரம யோக்கியனின் அயோக்கியத்தனத்தை வெளிப்படுத்துகிறது.

கலித்தொகை அடிகளை விளக்கும் கருத்துமிக்கக் கதை 'பிறந்த இடமும் புகுந்த இடமும்'.

'வேதாந்தி' பாடல்களின் சிகரம்.

மொத்தத்தில், தமிழகம் புரிந்த தவப் பயனாலேயே இவ்வளவு அருமையான கண்ணனை நாங்கள் நண்பனாக அடைந்திருக்கிறோம்.

எம். சீசர், முத்தியால்பேட்டை.

அன்புள்ள ஐயா,

தங்களது கண்ணன் இதழில் ''செய்திகள்'' என்ற குறிப்பில் ''குழந்தைகள் சினிமாப் பட உற்பத்திச் சங்கம்'' பற்றிய குறிப்பினைக் கண்டு, வரவேற்கிறேன்.

நமது தமிழ் நாட்டில், ஏன் இந்தியாவிலேயே சிறுவர்கட்காக சிறந்த சினிமாக்கள் அதிகம் வெளி வருவதில்லை. எப்பொழுதாவது சில (பூட் பாலிஷ், அண்ணி போன்றவை) தயாராகின்றன. அவைகூட சிறுவர்கட்கெனவென்றே பிரத்யேகமாகத் தயாரிக்கப்படவில்லை. சிறுவர்கள் பார்க்கத் தகுந்தது அவ்வளவுதான். இந்த நிலையில் குழந்தைகள் சினிமாப்பட உற்பத்திச் சங்கமாவது சரியான நிவாரணம் செய்யும் எனச் சிறுவர்களாகிய நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், என்ன ஏமாற்றம். அச்சங்கத்தில் எங்களுக்குச் சரியான பிரதிநிதிகளாக அங்கம் வகிக்க முழுத் தகுதி வாய்ந்தவர்களான எங்கள பத்திரிகை ஆசிரியர்களோ எழுத்தாளர்களோ அதில் இல்லை.

இந்த நிலைமையில் எங்களது மனத்தினை, எங்கள் கருத்தை, சரியான முறையிலே நீங்கள் ஒலிக்கச் செய்திருக்கிறீர்கள் அக் குறிப்பு மூலம். அதற்குத் தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமிகள் சார்பில் என்து நன்றிகள்.

—G. கண்ணன், மதுரை.

* 3 ரூபாய் பரிசு பெற்ற கடிதம்

15 - 5 - 55 அட்டைப் படம் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் அதன் கருத்துதான் புரிய வில்லை. ஆகவே இனி மேலாவது அட்டைப்படம் சும்மாப் போடாமல் அதற்கு விளக்கம் போடும்படிக் கேட்டுக் கொள்கிறேன். அல்லது அட்டைப் படக் கதையாவது வேண்டுகிறேன்.

அட்டையைத் திருப்பினேன்; செய்தியைப் படித்தேன். குண்டுச் சீமாவைச் சந்தித்தேன். ''வெயிலை''ப் பற்றி வெளுத்து வாங்கி விட்டார்கள் இளம் கவிஞர்கள். ஆனால் எங்கள் ஊரில் இந்த வருடம் கோடை இல்லாமல் மழை பெய்துவிட்டது. ''கேளுங்கள் சொல்லுகிறேன்'' இப்பகுதியை என் அண்ணன் பாராட்டுகிறான். ''மூன்று குருடர்கள்'' பித்துக்குளி செய்த வேலைத்தானே அது? அது அப்படித்தான் இருக்கும். ''பிறந்த இடமும் புகுந்த இடமும்'' என்ற கதையில் மலைக்கும், கடலுக்கும், யாழுக்கும் இதயம் இருந்தால் அவைகள் கவலைப்பட்டு இருக்கும். அதற்குத்தான் இதயம் இல்லையே. ஆனால் மனிதனுக்கு இதயம் ஒன்று இருக்கிறதே .நான் இவ்வாறு கூறுவதே தப்பு. என்னை யாரும் அதிகப்பிரசங்கி என்றால்?

அருமையான சம்பவம் என்ற தலைப்பில் ஒரு புளுகு!

''பாரசீக ரோஜா'' போன்ற தொடர் கதைகளுக்கு அட்டைப் படம் போடும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன். லீடர் மணிக்கு என்றுதான் துன்பம் நீங்குமோ தெரியவில்லை.

—விழுப்புரம் N. தாக்ஷாயணி.

15 - 5 - 55 கண்ணனின் அட்டைப் படத்தில் ராஜாவின் [illegible] தோற்றமும் [illegible] கோமாளி [illegible] பலே ஜோர்!'கதைகள்மட்டும் படித்தால் போதாது தம்பி. உலகச் செய்தியையும் படிக்கணும்' என்று ஆசிரியர் செய்தியைத் தருகிறார்.

ராஜியின் குண்டுச் சீமா முதன் முதலிலேயே வயிறு குலுங்க வைக்கிறான். அவன் குண்டு நடை போட்டு வருவான் என்பதில் சந்தேகமில்லை. கவி அரங்கத்திலே வெயில் என்ற கவி சில அடிகளை மட்டும் மாற்றி...அப்படியே கப்சா விட்டிருக்கின்றார். கல்வி எவ்வளவு முக்கியமோ அவ்வளவு கேளுங்கள் சொல்லுகிறேன் என்ற பகுதி நமக்கு பயனபடுகிறது.

'பகைவனுக்கு அருள்வாய்' என்ற கதை இரக்க மில்லாத முதலாளிகளுக்குப் போதிக்கவேண்டிய உருக்கமானக் கதை. எங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு விட்டார், த. ஜயந்தி அவர்கள்.

நல்லவனைப் போல் நடிக்கும் நயவஞ்சகர்களுக்கு எடுத்துக் காட்டாகப் பச்சைக்கல் பிரகாசிக்கிறது. பிறந்த இடமும் புகுந்த இடமும் சுமாராக இருக்கிறது.

பித்துக்குளி என்பவர் பலே சந்தேகப் பேர்வழி. துப்பறியும் சிங்கமாகச் சேகரைப் போட்டு நாட்டில் நடக்கும் நிகழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

நாங்கள் தாய் தகப்பனாரைத் தொந்தரவு செய்யாமல் நாங்களே மின்சார ஹார்ன் செய்யப் பழகிக் கொண்டோம் அண்ணா..

எங்கள் பகுதி எங்களதுதான்.. பாரசீக ரோஜா மணம் கமழ்ந்து வீசுகிறது. வேதாந்தியின் பாடடு சோக கீதமாக இருக்கிறது. டக்கென்று அந்த அறைக் கதவைக் கொக்கி போடும் ஓசை கேட்டது. லீடர் மணி என்ன ஆகப் போகிறானோ என்று கதி கலங்க வைத்து விடுகிறார் ஆசிரியர் ' ஆர்வி''.

மு. சுப. சிங்காரம்,
குருவிக்கொண்டான்பட்டி.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

தமிழ்நாடு [illegible] நூலகம்
2/1797
சென்னை-600 008

க ண் ண ன்

அதிருஷ்ட எண்கள்

இதோ பக்கத்தில் ஓர் எண் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த எண் அதிருஷ்ட எண்ணாக இருக்கலாம். எல்லாக் கண்ணன் பிரதிகளிலும் இதேமாதிரி ஒவ்வோர் எண் உண்டு. அவற்றில் பத்து எண்கள் குலுக்கி எடுக்கப்படும். அந்தப் பத்தும் அதிருஷ்ட எண்கள். அந்த அதிருஷ்ட எண்ணுள்ள இதழ் வைத்திருப்பவர்களுக்குப் பரிசுப் பணம் உண்டு.

பரிசு விவரம்

முதல் பரிசு	ரூ. 15/-
இரண்டாம் பரிசு	ரூ. 10/-
மூன்றும் பரிசு (மூன்று பேர்களுக்குத் தலா)	ரூ. 5/- வீதம்
நாலாம் பரிசு (ஐந்து பேர்களுக்குத் தலா)	ரூ. 2/- வீதம்
மொத்தம் பத்துப் பரிசுகளுக்கு	ரூ. 50/-

உங்கள் கண்ணன் இதழைப் பத்திரமாக வைத்திருங்கள்

க ண் ண ன் கா ரி யா ல ய ம், ம யி லா ப் பூ ர்

கண்ணன் கிளைக் கழகம்

திருப்பரங்குன்றம்
- உபதலைவர்: மு. சண்முகம்
- செயலாளர்: ரா. பாலசிவம்
- பொருளாளர்: நா. கிருஷ்ணன், மு. கார்மேகம்

ஐந்து பேர் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 'குயில்' என்ற கையெழுத்துப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கதைகள் அனுப்ப விரும்புபவர்கள் மு. சண்முகம், மளிகைக் கடை என்ற விலாசத்திற்கு அனுப்பலாம்.

ராமநாயக்கன் பாளையம், வேலூர் (வ.ஆ)
- உபதலைவர்: கே. தெய்வசிகாமணி
- செயலாளர்: கே. ராஜாமணி
- பொருளாளர்: அன்பன்

பத்துப் பேர் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 'விமானம்' (மாதம் ஒரு முறை), 'பாலகாந்தி' (வாராந்தரம்) என்ற கையெழுத்துப் பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நண்பன் நூல் நிலையம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கதை அனுப்ப விருப்பமுள்ளவர்கள் 11, பிள்ளையார் கோயில் தெரு என்ற விலாசத்திற்கு அனுப்பலாம்.

(Regd. as News paper in Ceylon.) Reg. No. M. 5

கண்ணன் வெளியீடுகள்

கலைமக[illegible]ரியாலயத்திலிருந்து வெளிவருபவை கண்ணன் வெளி[illegible]கள்; ஐந்து முதல் பதினாறு வயதுள்ள குழந்தைகளுக்கு ஏ[illegible]வை. நல்ல காகிதம்; அழகான ப[illegible]; பெரிய எழுத்துக்கள். குறைந்த விலையில் சிறந்த[illegible]வை கண்ணன் வெளியீடுகள்தான். இது வரை[illegible] 21 புத்தகங்கள் வெளிவந்துள்ளன. இன்னும் பல அடுத்து அடுத்து வரவிருக்கின்றன.



இப்போது கைவசம் உள்ளவை

1. அசட்டுப் பிச்சு ரூ.
2. பவழவல்லி அணா 1
3. ஜக்கு ,,
4. விஞ்ஞானம் பேசுகிறார் ,,
5. சமர்த்து மைனா ,,
6. மின்னல் அரக்கன் ,,
7. ஏரிக்கரை மாளிகை
8. மாஸ்டர் பாலகுமார்
9. தூங்கும் அழகி ,,
10. நீச்சல் பழக்கம் ,,
11. கோழி விதைத்த நெல் ,,
12. பார்வதியும் ஏழு சித்திரக் குள்ளர்களு

பாக்கிப் புத்தகங்க
விரைவில் கிடைக்

* ஸெட்டாக வாங்
ரூ. 4/- தான்
தபால் செலவு த

புத்தகங்களைத் தனித்
வாங்கும் கண்ணன்
அங்கத்தினர்களுக்கு 1
கமிஷன் உண்டு

விரிவான விலைப்பட்டியலுக்கு எழுதுங்கள்.